### தமிழ்ச்சமயச் சிறப்பு மலர்

# தமிழ்ச்சமயம் தமிழரின் தாய்ச்சமயம்

## தமிழே இறைமொழி



மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை

# பொருளடக்கம்


1. தமிழ்ச்சமய அருளுரை 1
2. சமயம் - பொருள் விளக்கம் 2
3. தமிழ்ச்சமய வரையறை 3
4. தமிழர் இறையியல் 4
5. தமிழ்ச்சமய அறிமுகச் செய்தி - தமிழ்த்திரு பாலமுருகன் வீராசாமி 5 - 9
6. தலைமை செய்தி - அருட்திரு கணேசன் சுப்புராயன் 10 - 12
7. சிறப்புக் கட்டுரை - முது முனைவர் மு. பெ. சத்தியவேல் முருகனார் 13 - 19
8. சிறப்புக் கட்டுரை - தமிழியல் ஆய்வறிஞர் இர. திருச்செல்வனார் 20 - 25
9. சிறப்புக் கட்டுரை - முனைவர் தர்மலிங்கம் நடராசனார் 26 - 32
10. சிறப்புக் கட்டுரை - முனைவர் இளஞ்சோதி தேவராசு அம்மையார் 33 - 41
11. சிறப்புக் கட்டுரை - வழக்கறிஞர் சிகரம் ச. செந்தில்நாதனார் 42 - 49
12. தமிழ்ச்சமய ஆதரவு இயக்கங்கள் 50
13. தமிழர் மரபார்ந்த நிகழ்ச்சிகள் வழிநடத்துனர் தொடர்பு 51




தமிழே இறைமொழி

# தமிழ்ச்சமய அருளுரை

தமிழ்ச் சமயம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பாரம்பரிய சமயம் மற்றும் வாழ்வியல் முறையாகும். ஆதியில் இயற்கையைப் போற்றும் வழிபாட்டுமுறையில் தொடங்கி, படிப்படியாக மரபு வழிப்பாடாகத் தமிழர் வாழ்வியல் வளர்ச்சி கண்டது.

பன்னெடுங்காலமாக வளர்ந்துவந்த வழிப்பாட்டு முறைகள் இன்றளவும் தமிழர்தம் சமயவாழ்வில் நிலைபெற்றிருப்பதைக் காணவியலுகின்றது

பழந்தமிழர் நிலப்பாகுபாடு அடிப்படையில் இனக்குழுக்களாக வாழ்ந்த காலந்தொட்டே கடவுட்கொள்கையை முன்னிலைப்படுத்தி வாழ்ந்துள்ளதைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. தமிழர்களால் போற்றிக் கருதப்படும் தமிழ் மொழி இறைமொழியாகவும் தமிழ்ச் சமயத்தில் ஆளப்படுகிறது.

தமிழர்தம் இறை வழிபாடு என்பது நன்றி நவிலும் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டது. தமிழர்களின் இறையியல் இமயம் முதல் குமரி வரை பல அடைமொழிகளைக் கொண்டு விரிந்தது. என்றாலும் தென் தமிழ் நாட்டில் நுண்ணிய தத்துவ நிலையில் செம்மைப்பட்டது.



## தமிழே இறைமொழி

# சமயம் - பொருள் விளக்கம்

சமை - சமைத்தல் (பக்குவப்படுத்தல்) – சமையம் - சமயம் = மனிதனின் ஆன்மா இறைவனை அடையத் தகுதிப்படுத்தும் ஒழுக்கம் அல்லது நெறி. மனிதனைப் பக்குவப்படுத்தி இறைநிலை படுத்தும் ஒழுக்கமானது சமயம் என்றானது.

" சமயம்" என்பது வாழ்வின் பல்வகைச் சூழ்நிலைக்கும், ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும் ஏற்ப மனிதன் தன் நடத்தையை அமைத்துக்கொள்ள உதவியாய் அமைந்த ஒரு கருதுகோள்.

தனிமனிதர் பெறுகின்ற சமயத் தெளிவையும் செயல்பாடுகளையுமே தொகுத்த விளைவாக சமுதாய தாக்கமாக வெளிப்படுகிறது. சமுதாய தாக்கமே தனிமனித வாழ்வை உயர்த்தவோ அல்லது தாழ்த்தவோ செய்கிறது.

இக்கருத்தையே திருவள்ளுவரும்,

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனையது உயர்வு" (குறள் - 595)

என்று கூறுகிறார்.



# தமிழே இறைமொழி

# தமிழ்ச்சமய வரையறை

தமிழர்களின் சமயம் நோக்கிய அணுகுமுறைகள், சிந்தனைகள், நடைமுறைப் போக்குகள், வரலாற்றுக் கூறுகள் அனைத்தும் தமிழ்ச்சமயம் என்ற வரையறைக்குள் அமைந்துள்ளன. தமிழ்ச்சமயம் என்பது மூன்று முகாமையான கூறுகளின் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டுள்ளது;

1. தமிழால் ஆக்கம் பெற்றுள்ள அதன் வழிபாடுகள் தமிழையே மூலமாகக் கொள்ளுதல்.
2. தமிழர் மரபுக்கும் பண்பாட்டிற்கும் உள்ளடங்கிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்.
3. தமிழர் கண்ட மெய்யியலையும் அவற்றின் நூல்மரபுகளையும் மேற்கொள்ளுதல்.

தமிழர்கள் இவ்வரையறைக்குள் உட்பட்டுள்ள சமயங்களையும் அவற்றை ஒத்த மரபு நெறிகளையும் தமிழ்ச்சமயமாக ஏற்று கடைப்பிடித்தல் வேண்டும்.



தமிழே இறைமொழி

# தமிழர் இறையியல்

## மரபுசார் வழிபாடு

தமிழரின் மரபு சார் வழிபாடு இயற்கையிலிருது தொடங்குகிறது. இந்த வழிபாடு காலம்காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்து பின்பற்றப் படுகின்றன.

1. இயற்கை வழிபாடு
2. நடுகல் வழிபாடு
3. குலதெய்வ வழிபாடு
4. நாட்டார் வழிபடு
5. தாய் தெய்வ வழிபாடு

## சமயம் சார் வழிபாடு

இறை, உயிர், உலகம் பற்றிய ஒரு நம்பிக்கை முறை. ஒவ்வொரு சமயமும் வழிபாட்டுத் தலங்களையும், சமயகுருமார் களையும், சமய சடங்குகளையும் கொண்டிருக்கின்றன.

1. சிவனியம்
2. முருகியம்
3. விநாயகம்
4. அம்மையம்
5. மாலியம்

## அகம் சார் வழிபாடு

இறைவனை மனதில் எண்ணி வழிபடும் முறை ஆகும். இறைவனை மனதில் இருத்தி வழிபாடு செய்வது அக வழிபாட்டின் இரண்டாம் நிலை. உயிரும், இறைவனும் ஒன்றாக ஆவது மூன்றாம் நிலை.

1. சித்தர் நெறி
2. சன்மார்க்கம்



# தமிழே இறைமொழி



# தமிழ்ச்சமய அறிமுகச் செய்தி

**தமிழ்த்திரு பாலமுருகன் வீராசாமி**
மலேசிய தமிழ்ச்சமய மாநாடு
(ஒருகிணைப்பாளர்)

*என் உயிருக்கினிய தாய்த்தமிழ் உறவுகளே..*

*நம் முன்னோர்கள் விதைத்த தமிழ்ச்சமய மீட்சியை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை என் வந்தது.? மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை உருவாக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது.? தமிழ்ச்சமய ஆய்வு, கருத்தரங்கம் மற்றும் மாநாடு என கூட்ட வேண்டிய தேவை ஏன் நமக்கு அவசியமானது.?*

*இதற்கு விடை காணத்தான் இப்பதிவின் நோக்கம். உலகத்தின் மூத்த மொழி தமிழ்.! உலகத்தின் மூத்த மாந்தன் தமிழன்.! உலகில் பெரும் வல்லரசை நிறுவி அதிக நிலப்பரப்பை ஆண்டவன் தமிழன்.! இமய முதல் குமரி வரை கங்கை தொடக்கம் கடாரம் வரை எட்டு திக்கிலும் வெற்றிக்கொடையை பரப்பி விட்டவன் தமிழன்.!*

*இப்படி சுமார் 50,000 ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழர் தேசிய இனத்திற்கென்று ஒரு சமயம் இருந்திருக்காதா.? நமக்கென்று ஒரு மெய்யியல் கோட்பாடு இருந்திருக்காதா.? கி.மு 10,000 ஆண்டுகளுக்கு முன்பே குமரிநாட்டுத் தமிழ்மக்கள் மூவகை வாழ்வியல் நெறிகளைக் கொண்டிருந்தனர் என்கிறார் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள்.*

*தமிழருகென்று தனித்த சமய நெறிகள் இருக்கின்றன. அதுவே தமிழர்களுக்கான தமிழ்ச்சமயம். இது என்ன புதியதாக இருக்கிறது என எண்ணுகிறீர்களா.? ஆம், அதை மறுத்து மறக்கடித்து உன்னையும் என்னையும் மடைமாற்றி தமிழிறைச் சிந்தனைகளைத் தன்வசைப்படுத்தியது தமிழருக்குத் தொடர்பில்லாத அயலாரின் ஆரிய சனாதான வைதிக இந்து மதம் எனும் வரலாற்றுப் பிழை.*

*என் அன்பு சொந்தங்களே, அதை ஏற்பவர்களுக்கும் அம்மதத்திற்கு எதிராக கருத்துக்களை மட்டும் நான் தெரிவிப்பதாக தயவு செய்து தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.? நடுநிலை சிந்தனையோடு எது உண்மை வரலாறு என்பதைத் தெரியப்படுத்த வேண்டியதே முகாமையான கடமையாகும்.*

*அயலார் வழி இறக்குமதியான இந்து மதத்தின் முன்னோடி நூலான ரிக்வேதம் தோன்றுவதற்கு முன்னமே தமிழருக்கான முதற் தமிழ்ச்சங்கமானது 4440 ஆண்டும், இரண்டாம் தமிழ்ச் சங்கம் 3700 ஆண்டும் நடைபெற்றது என்று நக்கீரனாரின் இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. அப்படியாயின் தமிழர்கள் நாம் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வரலாற்று பின்புலத்தைக் கொண்டவர்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைய காலகட்டத்தில் தமிழர் வழிபாட்டு நெறிமுறைகளின் வளர்ச்சி என்ன.? தமிழர்களின் வழிபாட்டு முறைகள் என்ன.?*

மக்களின் அறிவு நிலைக்கு ஏற்ப சிறு தெய்வ வணக்கமான இயற்கை வழிபாடு, சூரிய வழிபாடு, மர வழிபாடு, முன்னோர்கள் வழிபாடான நடுகல் வழிபாடு, குலதெய்வ வழிபாடு, நாட்டார் வழிபாடு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைக்கான இறையாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை வழிபாடு வரை நகர்ந்து, பெருந்தேவ சமய மறுமலர்ச்சியாக சிவனியம், மாலியம், ஆசிவகம் உருவாகி கடவுள் பெருநெறியாக நேரிதின் உணர்ந்தோர் சித்தர் நெறி மற்றும் வள்ளலாரின் சன்மார்க்கம் உட்பட தமிழால் தமிழர்களால் உலக இயற்கையும் அறிவியலும் உணர்ந்து பகுத்து வகுத்து வழிபட்டு வந்தவர்கள் தமிழர்கள் நாம்.

பின்னால் வந்த வரலாற்றுக்கேடாக, இடையில் கலந்த வைதீகம் மட்டுமே மக்களால் எடுபடாத காரணத்தால், தமது வைதீக வழிமுறைகளை மாற்றி, தமிழ்ச்சமய நிலைகளை கடத்தி, வரலாற்றுப் பிழையை இழைத்து நம்மை நம்ப வைத்தது.

எந்த தமிழ் நூல்களில் தமிழர்கள் அயலாரின் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டு இருக்கிறது.? தமிழ் நிலத்தில் தோன்றிய 63 நாயன்மார்கள் 18 சித்தர்கள் 12 ஆழ்வார்கள் உட்பட அகத்தியர், திருமூலர், பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர், இளங்கோவடிகள், ஔவை, வள்ளலார் வரையிலான நமது அருளாளர்கள் அனைவரும் தமிழ்ச்சமயத்தையும் பெருநெறியையும் தவிர எந்த இடத்தில் அயலாரின் வைதீக இந்து மதத்தை போதித்தார்கள்.?

என் அன்பு சொந்தங்களே, எனது அப்பா பெயர் வீராசாமி. நீ ராமசுவாமி என்று வைத்துக் கொள் என்று திணிப்பது எப்படி ஏற்க முடியாத மதிப்பிலப்போ.? அப்படித்தான் நம் இனத்தின் அடையாளமும் சமயத்தின் அடையாளமும் அடுத்தவன் பெயரில் இருப்பதும் பெயரிடுவதும் என்பதை மறந்து விடாதீர்கள்.?

என் தாத்தாவின் கைப்பையை வழியில் வந்த திருடன் பறித்து சென்றவுடன், என் தாத்தாவால் ஓடி பிடிக்க இயலவில்லை, என் அப்பா ஓடிப் பிடித்து மீட்க முற்பட்டார். அவராலும் தொலைந்ததை மீட்க முடியவில்லை, பாதியிலே விட்டுவிட்டார். தாத்தாவின் பேரன் என்னால் ஓட முடியும், நான் ஓடி அந்த திருடனை துரத்தி பிடித்து இழந்ததை மீட்கிறேன். அவ்வாறே அறிவில் சிறந்த, இயற்கையில் இணைந்த, மெய்யறிவு பறந்த, இறைஞானம் நிறைந்த, தூய மாந்தநேயமும் ஆன்மநேயமும் அமைந்த தமிழரின் தமிழ்ச்சமயத்தை மீண்டும் மீட்பதே நம் கடமையாகும்.

தமிழரின் தனித்த சமயத்தையும் இறைகோட்பாடுகளையும் மீட்பதற்கு பல நூற்றாண்டுகள் சான்றோர்கள் நம்மை கண்டித்தும் நமக்கு வழிகாட்டியும் உள்ளதை நாம் மறுக்க இயலாது. கடந்த நூற்றாண்டிலே இந்திய அரசு விடுதலைக்கு முன்பே ஆங்கிலேயர் ஆட்சியிலே 1940 ஆம் ஆண்டு தமிழ்ச்சமய மாநாடு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மண்டபத்தில் தமிழ்க்கடல் மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்றது என்பது நம் முன்னவர்களின் அரிய முயற்சியின் வழி நாம் சரியான பாதையில்தான் பயணிக்கிறோம் என்பதை காட்டுகின்றது.

மேலும் இந்நாள்வரை தாய்த்தமிழகத்திலும் சரி, புலம்பெயர்ந்த தமிழர் இடத்திலும் சரி, தமிழ்ச்சமயம் என்ற சிந்தனையும் அதனை தொட்டு வாழ்வியல் செயல்முறைகளும் கூட்டங்களும் மாநாடுகளும் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழருக்கென தனித்து தமிழர் ஆட்சி அமைந்தால் தமிழ்ச்சமயம் தமிழகத்திலும் மட்டுமல்ல உலகில் எத்திசையிலும் வாழும் தமிழருக்கும் உடனடியாக சரியான மாற்றத்தை வழங்கி, அடிமை நிலையிலிருந்து மீட்க முடியும்.

ஆனால், அக்காலம் வரை காத்திருக்க இயலாது, எனவேதான், தமிழிய ஆட்சி மலரும் முன்னமே மேல் குறிப்பிட்டது போல பலதரப்பினர் தங்கள் தமிழ்ச்சமயம் முயற்சியும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வரலாற்று முயற்சியில் நம் மலேசியத் திருநாட்டில் தமிழர்களை ஒருங்கிணைத்து சரியான இறைவழிபாட்டுப் பாதையை காட்டுவதே இம்மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் முதல் பணியாகும்.

பேரவையின் நோக்கமாக, இனி வாழ்கின்றவர்களும் வாழப்போகிறவர்களும் நாம் தமிழர் என்பதை உணர்ந்து பிறருக்கும் உணர்த்த வேண்டும். தமிழரின் இறையியல் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். அதன் தூய்மையை எங்கும் எதிலும் போற்றி புரக்க வேண்டும். தமிழரின் தனித்துயர்ந்த சமய நெறியை கண்டுகாட்டி வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்.

என் அன்பு சொந்தங்களே, தமிழர்களின் இறைவழிபாடு தமிழ்மொழியிலே செய்யப்பட்டது, தமிழருக்கான நான்மறை தமிழிலே இருந்தன என்பதற்கெல்லாம் சான்றுகள் ஏராளமாய் உள்ளன. ஏராளமாய் உள்ளதை எட்டிக் கூட பார்க்காத காரணத்தால் அந்நியரிடம் ஏளனமாய் ஆகிவிட்டனர்.

சான்றுகளுக்காக..

"அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலாம் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடு கென்றா தூமறை பாடும் வாயார்" எனத் தம்பிரான் தோழரை நோக்கி இறைவனே தமிழில் பாட பணித்தமை என்பதும்,

"செந்தமிழர், தெய்வமறை நாவர், செழு நன்கலை தெரிந்த அவரோடு அந்தம் இல் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரன் ஊர்" என்ற பாடலில், திருவீழிமிழலைக்குச் செல்கிறார் சம்பந்தர், அங்கு திருக்கோயிலில் செந்தமிழர்களே தமிழில் அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார்கள் என பாடுகிறார் சம்பந்தர் என்பதும்,

"ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லைதன்னுள் ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து" என்ற பாடலில், தில்லை கோயிலில் தமிழ்த் துதிகளே ஒலித்ததாம்,

"தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல முழவம் மொந்தை மல்குபாடல் செய்கை இடம் ஓவார்" என்ற பாடலில், எங்கெங்கே தமிழோசை கேட்கிறதோ அங்காங்கே அமர்ந்து விடுகிறான் இறைவன் என்று செய்தி தெரிவிக்கப்படுகிறது.
எனவே தமிழரின் வரலாற்றில் திருக்கோவில்கள் அனைத்திலும் தமிழில்தான் வழிபாடு நடைபெற்றது என்பது புலனாகிறது.

"சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் மிதாசனியா திருந்தேன் நின்ற காலம்" சதாசிவ தத்துவத்தில் எழுந்தது முத்தமிழ் வேதம் என்று திருமூலர் கூறுகிறார்.

ஆதியிலே தமிழில் வேதம் இருந்தது, அது இடையில் மறைந்தது, அப்பழைய மறையைப் புதிய வடிவில் தமிழில் பாடி அருளினார்கள் என்பதை, "எதிர்கொளும் பதி தனில் எழுத் தருளினார் என்றும் புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசானார்" என்ற வரிகள் உணர்த்துகின்றன.

"பிறப்புக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறியவர்கள் நாம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறியவர்கள் தமிழர்கள் நாம். பல்வேறு தமிழ்ச்சமய நெறிகள் இருந்தாலும் அவற்றைப் பொறைகொண்டு அறஞ்சார்ந்து ஒருங்கிணைப்பதே தமிழினத்தின் நலன் ஆகும். சிவனியத்தில் திருஞானசம்பந்தர் "உள்ளங்கவர் கள்வன்" என்பது போல, திருமாலியத்தில் நம்மாழ்வார் "தாமரைக் கண்ணன் கள்வன்" என்கிறார், முறையில் வெவ்வேறாகினும் வீடுபெறுவது ஒன்றல்லவே.

"பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுன்னி யுரைத்த கணக்கறு நல்த்தனன் அந்தமிலாதியம் பகவன்" என்கிறது திருவாய்மொழி,

"அறிவினால் மிக்க அறுவகை சமயத்து அவ்வவர்க் காங்கே ஆரருள் புரிந்து" என்கிறது தேவாரம்,

ஆறு சமயத்தின் வழி ஒழுகியவர்கள் அந்நெறிகளின் முடிவாகச் செந்நெறியாகிய பெருநெறியை மேற்கொள்வர் என்று தெரிய வருகிறது. தமிழ்ச்சமயமானது முன்தொட்டு ஆறு சமயங்களும் அவற்றின் மேலான செந்நெறியும் கலந்து ஒரு பெருநெறியாய்த் திகழ்ந்து வருகின்றது.

ஆகவே அன்பு சொந்தங்களே, தமிழருக்குள் சமய ஒற்றுமை ஏற்படுமாயின் அது தமிழின ஒற்றுமைக்கு வழிவகுக்கும். தமிழின சீர்திருத்தத்திற்குச் சமயம் தடையாகாதென்ற கருத்து நமக்குள் பரவ தமிழ்ச்சமயம் என்ற இணைப்பு உறுதியாகி தமிழரால் பேணப்பட வேண்டும்.

தமிழர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா பண்பாடு, சமயம், வாழ்வியல் கரணங்களைத் தமிழ்முறைப்படி தமிழிலேயே தமிழர்களை ஆட்கொண்டு அறம், அன்பு, பண்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அயலாரின் ஆரிய சனாதான வைதீக ஏற்றத்தாழ்வு, தீண்டாமை நால்வண்ணம் பூசல்கள் இல்லாமல் செய்வித்தல் வேண்டும்.

அதற்கான வழிகாட்டி நூல்களும் வழிகாட்டி ஆட்களும் தமிழ்ச்சமயத்தில் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தமிழருக்குத் தீங்கு விளைவிக்கும் மாற்றானின் முறைகளை தேடி தேடி கண்டறிந்து ஆட்கொள்ளும் தமிழர்கள் மாற்றத்திற்காக மெய்யான தமிழ்முறையையும் தேடித்தேடி ஆட்கொள்வது வரலாற்றுக் கடமையாகும்.

மேலும் தமிழ் கோவில்கள், தமிழ் இடுகாடு என இருந்தவை தற்போது தமக்கு தொடர்பில்லாத பெயர்களில் மடைமாறி மெல்ல மெல்ல நமது அடையாளம் அளிக்கப்படுவதிலிருந்து மீண்டு எழவேண்டிய காலத் தேவையாக தமிழ்ச்சமய மீட்சி, ஆய்வு, பேரவை, கருத்தரங்கு, மாநாடு என எம்மூதாதையர்களின் வரலாற்றுப் புரட்சி பயணங்கள் எங்களை நகர்த்துகிறது.

தமிழர்கள் தெளிந்து விட்டார்கள், தமிழியம் அறிந்து விட்டார்கள், இனி அவர்களை அறியாமலே வைத்திருக்கும் எண்ணம் ஒருபோதும் பலிக்காது.

தமிழரின் தமிழ்ச்சமயம் நிலைபெற வேண்டுமாயின் தமிழ்மொழி பேணப்பட வேண்டும், தமிழ்மொழி நன்கு பேணப்படுவதற்கு அதனை தாய்மொழியாக கொண்ட தமிழர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும், முன்னேற்றம் அடைவதற்கு தமிழரது பொருளாதார நிலை சிறக்க வேண்டும், அது சிறப்பதற்கு தமிழருட் செல்வந்தர்களாக இருப்பவர்களும் சொல்லாற்றல் செயலாற்றல் உடையவர்களும் தமிழினத்திற்குள் ஒருவருக்கொருவர் துணையாக இருத்தல் வேண்டும்.

ஆகவே, தமிழிய உடன்பிறப்புகளே, தமிழர்களின் சமயம் நோக்கிய அணுகுமுறைகள், சிந்தனைகள், நடைமுறை போக்குகள், வரலாற்றுக் கூறுகள் அனைத்தும் தமிழ்ச்சமயம் என்ற வரையறைக்குள் அமைந்துள்ளன. தமிழ்ச்சமயம் என்பது மூன்று முகாமையான கூறுகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

1. தமிழால் ஆக்கம் பெற்றுள்ள அதன் வழிபாடுகள் தமிழையே மூலமாக கொள்ளுதல்.
2. தமிழர் மரபுக்கும் பண்பாட்டிற்கும் உள்ளடங்கிய நெறிமுறைகளை கடைபிடித்தல்.
3. தமிழர் கண்ட மெய்யிலையும் அவற்றின் நூல் மரபுகளையும் மேற்கொள்ளுதல்.

தமிழர்கள் இவ் வரையறைக்குள் உட்பட்டுள்ள சமயங்களையும் அவற்றை ஒத்த மரபு நெறிகளையும் தமிழ்ச்சமயமாக ஏற்று, பற்றி, காத்து அடுத்த தமிழர் தலைமுறை பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என உரிமையுடன் வலியுறுத்தி,

"தன்னாயுதமும் தன்கையில் பொருளும் பிறன்கையில் கொடுக்கும் பேதையும் பதரே" என்ற நம் முன்னோர் ஆதி வீரராமபாண்டியரின் அறிவுரையை என்றும் மறக்கலாகாது என்ற வரிகளுடன் எமது விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

தமிழே இறைமொழி

தமிழ்ச்சமயம் ஏற்போம், தமிழ்ச்சமயம் காப்போம்.

ஆக்கம் :
பாலமுருகன் வீராசாமி

தரவு :
பன்னீர்செல்வம் அரசு



தமிழே இறைமொழி



# தலைமை செய்தி

**அருட்திரு கணேசன் சுப்புராயன்**
தலைவர்
மலேசிய தமிழ்ச் சமயப் பேரவை

*உருவாய் அருவாய் உளதாய் இலதாய்..*
*மறுவாய் மலராய் மணியாய் ஒளியாய்..*
*கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்..*
*குருவாய் வருவாய் அருள்வாய் குகனே..*
*என்ற அருளாளர் அருணகிரிநாதரின் வரியில் தொடங்கி,*

*வான்முகில் வாழாது பெய்க..*
*மலிவளம் சுரக்க, மன்னன்*
*கோன்முறை அரசு வெழ்க..*
*குறைவிலாது உயிர்கள் வாழ்க..*

*என்ற அருளாளர் கச்சியப்பர் வரிகளுடன் வாழ்த்தி*

*ஆதியாய் நடுவுமாகி அளவில்லா அளவுமாகிச்..*
*சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி..*
*பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகி..*
*போதியா நிற்கும் தில்லை பொது நடம் போற்றி போற்றி..*

*என்ற பெரிய புராணம் வரிகளை பாடி*

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்..*
*தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு*

*என்ற அருளாளர் திருமூலரை வணங்கி,*

*இறை தந்த தமிழ் போற்றி,*
*தமிழ் தந்த மறை போற்றி*
*மறை தந்த அறம் போற்றி*

*தமிழால், தமிழரால் மெய்யியல் கண்டு, உலக இயற்கையையும் அறிவியலையும் உணர்ந்து, பகுத்து வகுத்து அமைத்த, தமிழ்ச்சமய நிலைகளின் வாழ்வியல் வழிமுறைகள், நெறிமுறைகள் மற்றும் தமிழர்களுக்கே உரிய உன்னத மரபுகளைக் கடைபிடித்துக் கற்பிக்கப்பட்டதை, வழி வழியே காத்தும் பற்றியும் அதன் தெளிவையும் அடையாளம் மீட்சியும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தார்மீகக் கடமையில் களப்பணியில் மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை களம் கண்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.*

*இது இன்று நேற்று தொடங்கப்பட்ட செய்தி அல்ல, நம் முன்னவர்கள் மூதாதையர்கள் அருளாளர்கள் என பல நூற்றாண்டுகள் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் தமிழரின் தனித்த தமிழ்ச்சமய நிலைகளின் இறை கோட்பாடு மீட்சியானதாகும்.*

ஆயினும் இடையில் மழுங்கடிக்க வந்த அயலாரின் சூழ்ச்சியை முறியடிக்க, மீண்டும் புதிய முயற்சியாக, கடந்த நூற்றாண்டிலே இந்திய அரசு விடுதலைக்கு முன்பே ஆங்கிலேயர் ஆட்சியிலே 1940ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்கடல் தனித்தமிழ் இயக்கத் தந்தையும் பன்மொழியறிஞருமான மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ்ச்சமய மாநாடு நடந்திருப்பதை பலர் அறிந்திருக்க கூடும்.

அவ்வழியே அவர்களின் வாரிசுகளான நாங்கள், பல போராட்டங்களின் வழி இம்மண்ணில் இப்பேரவையை பதிவு செய்து, நம் முன்னவர்களின் அறிய முயற்சியின் வரிசையில் தொடர் முயற்சியாக அவர்கள் வழிகாட்டிய சரியான பாதையில்தான் பயணிக்கிறோம் என்பதை எங்களது செயல்பாடு காட்டுகின்றது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இவ்வுலகத்தின் மூத்த இனமான தமிழர் தேசிய இனத்தின் பெருமக்கள். நம் தாய்மொழி செம்மொழி தமிழ்மொழி. தற்போதைய நிலையில் பல சமய மதத்தை பின்பற்றும், நமது தாய்ச்சமயம் என்பது தனித்த தமிழ்ச்சமயம் என்பதை எத்தனை பேர் அறிவர்.

அவ்வகையில் அறிவில் சிறந்த, இயற்கையில் இணைந்த, மெய்யறிவு பரந்த, இறைஞானம் நிறைந்த, தூய மாந்தநேயமும் ஆன்மநேயமும் அமைந்த தமிழ்ச்சமயத்தைக் காத்துத் தமிழே இறைமொழி என தமிழ்ச்சமய தொன்மையைப் பறைசாற்றுவதோடு "தமிழ்ச்சமயம் தமிழரின் தாய்ச்சமயம்", எனும் ஆய்வு விளக்கத்தை இம்மாநாடு உங்களுக்கு தரும் என்பதில் ஐயமில்லை.
நமது இனம் வீழ்ந்தது அந்நியர்களால் வீழ்த்தப்பட்டது சமயத்தில்தான். வீழ்ந்த இடத்தில் தான் மீண்டும் எழ வேண்டும்.

ஆகையால், இந்த வரலாற்று முயற்சியில் நம் மலேசிய தமிழர்களை ஒருங்கிணைத்து, தமக்கு பொருந்தாத தொடர்பு இல்லாத சமய மதங்களை பின்பற்றுபவர்களுக்கு சரியான இறைவழிபாட்டு வழிகாட்டுதலை உருவாக்குவும் தமிழருக்கே உரிய தமிழ்ச்சமய அடையாள மீட்சியை பறைசாற்றவும் மேலும், பேரவையின் நோக்கமாக, இனி வாழ்கின்றவர்களும் வாழப்போகிறவர்களும் நாம் தமிழர் என்பதை உணர்ந்து பிறருக்கும் உணர்த்த வேண்டும்.

தமிழர்களது இறையியல் தன்மையை வெளிப்படுத்தி, அதன் தூய்மையை எங்கும் எதிலும் போற்றி புரக்க செய்வதோடு, தமது தனித்துயர்ந்த சமய நெறியை அடையாளம் கண்டு வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்.

எனவே, தமிழ்ச்சமய மெய்யியலை பரப்ப, தமது தமிழ்ச்சமயப் பேரவை மூலம் நாம் எண்ணற்ற பல முன்னெடுப்புகளை செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப நம் தோள் மீது இருப்பதை நினைவுர்த்தி,

மெல்ல மெல்ல பெரும் பலத்துடன் நமது பேரவையை வளர்த்தெடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பில் நாம் அடுத்த கட்டத்திற்கு முன்னேற வேண்டும் என்பதையும் வலியுறுத்தி,
அந்த அரும்பெரும் பணியில் நம்மோடு களமாடுகிற அத்தனை அன்பு சொந்தங்களுக்கும் எனது வாழ்த்தும் நன்றியும் தெரிவித்து,

இறுதிவரை உடனின்று இம்மாநாடு வெற்றி பெற அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டு,

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்..
நிலவுலாவிய நீர்மலி வேணியன்..
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்..
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்..
என்ற அருளாளர் சேக்கிழாரை வணங்கி,

சிந்தை நிறைந்தினிதே செய்யும் தொழில் பெருக..
தந்தை அருகிருந்தே தாங்கும் அருள் போன்றே..
எந்த பதிஇறையே.! எம்மான் ஒளிவிளக்கே..
விந்தை வழிகாட்டி வெற்றி அளித்திடுவாய்..

தமிழ்க்குயிலார் வரிகளுடன் நிறைவு செய்கிறேன்.

தமிழே இறைமொழி
தமிழ்ச்சமயம் தமிழரின் தாய்ச்சமயம்



# தமிழே இறைமொழி



# தமிழ்ச் சமய மீட்சி - சில சிந்தனைகள்


## செந்தமிழ் வேள்விச் சதுரர், முதுமுனைவர்
## மு.பெ.சத்தியவேல் முருகனார்

*B.E., M.A., M.Phil, D.D, D.Lit. (USA)*
*12, முருகா அடுக்ககம், 11வது தெரு, நியூகாலனி, ஆதம்பாக்கம், சென்னை 600088*
*கைபேசி: +919444042770, மின்னஞ்சல்: mpsvelmurugan@gmail.com*


*16.09.2023 அன்று*

*நான்காவது தமிழ்ச் சமய மாநாடு 2023 மலையகத்தில் நடைபெறுகிறது. இதற்கென தமிழ்ச் சமயப் பேரவை தொடர்ந்த தளராத முயற்சிகளை எடுத்துவர இன்று அது நடத்தும் நான்காம் தமிழ்ச்சமய மாநாடு 2023 பத்து கேவ்ஸ் முருகப் பெருமான் திருவடிச் சான்றாக அவனருளாலே அவன் தாள் வணங்கி நடைபெறுகிறது.*

*தமிழர்களுக்கும் நான்காம் எண்ணிற்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. குறிப்பாக தமிழ்ச் சமயத்திற்கும் நான்கிற்கும் ஓர் இறுக்கமான தொடர்பு உண்டு. தமிழ்ச் சமயமே நால்வர் பெருமக்களைப் போற்றிட நால்வர் பெருமக்களால் எழுச்சி பெற்றது அதனால் தான் தமிழ் மக்களிடையே, நாலுபேர் சொன்னபடி போ! என்ற வழக்காறு உண்டு. வாழ்க்கை நெறி தமிழ்ச் சமய நெறியில் இருந்து சற்று பிறழுமானால் "நாலு பேர் என்ன நினைப்பார்கள்?" என்றும் கூறுவது உண்டு.*

*அந்த நாலு பேர் அக்கம் பக்கத்து குப்பன், கோவிந்தன் அல்ல; நல்வழி காட்டிய நம் நால்வர் பெருமக்கள் தான், தமிழ்ச் சமய நெறியை மீட்டவர்கள். எப்படி? அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் நெறியின்துறை வெல்ல தமிழ்ச்சமய நெறியை மீட்டவர்கள்.*

*ஆக, இந்த மாநாடு ஏனைய நடந்தேறிய மூன்று மாநாடுகளின் சிறப்பின் அடிதளத்தில் எழுந்த அதிக சிறப்பு பெற்ற மாநாடு. காரணம் நால்வர் பெருமக்களும் உவந்திடும் நான்காம் மாநாடு; நால்வர்களும் இம்மண்டபத்தில் இப்போது சூக்குமமாக இங்கே நிறைந்து நிற்கிறார்கள்.*

*இந்த நால்வர் பெருமக்கள் கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை அயலவர் தாக்கத்தால் அருகிக் கொண்டிருந்த காலத்தில் தமிழ்ச் சமயத்தை மீட்டெழச் செய்த செய்றகரிய சாதனை செய்தவர்கள். அதற்கப்புறம் தமிழ்ச் சமயநெறியில் சற்று தொய்வு நேர்ந்தது; நேர்ந்து வருகிறது. இதுவும் அயலவர் தாக்கத்தால் நேர்ந்தது தான். இன்று தமிழ் மக்கள் தலை தடுமாற்றம் அடைந்திருக்கின்றார்கள். இதனை முக்காலமும் உணர்ந்த முத்தமிழாகம திருமூலர் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்.*

*தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை தன்னை அறியாமல் தானே கெடுகின்றான் தன்னை அறியும் அறிவை அறிந்தபின் தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே!*

*திருமூலர் யாரையோ பொதுவாகச் சொல்கிறார் என்று கடந்து போகாதீங்க! தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்' என்று திருமூலர் சொன்னது தமிழர்களைத் தான்! அட! நம்மைத் தாங்க!*
*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே*

*என்று பாடிய திருமூலர், பின்னே, தமிழரைத் தானே அக்கறையோடு அப்படி உறைக்கப் பாடி இருப்பார்.*

*இப்படி நால்வர் பெருமக்களும், திருமூலரும் தட்டிக் குட்டி தமிழர்களை எழுப்பி தமிழ்ச்சமய நெறியை மீட்ட பிறகு நேர்ந்த தொய்வைப் போக்கி மீண்டும் தமிழ்ச் சமய மீட்சிக்கு நாங்களாயிற்று! என்று எழுச்சி பெற்றது தான் இந்தத் தமிழ்ச்சமயப் பேரவை! அப்படியானால், நால்வர் பெருமக்களும், திருமூலரும் இப்போது சூக்குமமாக இங்கே நிறைந்திருப்பார்களா, மாட்டார்களா? அதிலென்ன சந்தேகம்!*

*ஆமாம்! திருப்பித் திருப்பி தமிழ்ச்சமயம், தமிழ்ச்சமயம் என்றும் அதன் மீட்சி என்றும் சொல்கிறீர்களே, தமிழ்ச் சமயம் என்றால் என்ன என்று நம்பிள்ளைகள் கேட்க மாட்டார்களா? பெரியோர்களை நான் சொல்லுவேனா? இங்கே இருக்கிற பெரியோர்கள் எல்லாம் தமிழ்த் தங்கங்கள்! நான் பிள்ளைகளைச் சொல்கிறேன்! நம்ம இளைஞர்களை நாம் தானே நெறிப்படுத்த வேண்டும்! அப்படி நெறிப்படுத்தினால் தானே, தமிழ்ச் சமயமீட்சி தலைதூக்கி வெற்றி பெறும்?*
*தமிழ்ச்சமயப் பேரவை தமிழ்ச்சமய நிலைகளை மூன்று வகையான வளர்நிலைகளைக் கட்டமைத்துக் காட்டுகிறது.*

*1. மரபு வழிபாட்டு நிலை*
*2. சமய வழிபாட்டு நிலை*
*3. அக வழிபாட்டு நிலை*

*ஒன்றிற்கு ஒன்று ஏற்றம்; அதே சமயம் இந்த மூன்றில் ஒன்றின்றி மற்றது இல்லை; மூன்றும் என்றும் இயைந்து இயக்கி ஏற்றும் படிநிலைகள். நான் மேலே மூன்றாவது படிக்கு உயர்ந்துவிட்டேன் என்று மற்ற இரண்டு படிகளை இடித்து விடலாமா? தப்பு! மாபெரும் தப்பு! இதில் இரண்டு தப்பு இருக்கிறது. அதாவது மற்றவர்கள் ஏறி வர வேண்டாமா? அவர்களின் உயர்ச்சியைத் தடுப்பது ஒரு குற்றம். அடுத்து இரண்டாவது படி ஏறிவந்தவர்க்கே ஆபத்து! மூன்றாவது படியையும் மற்ற இரண்டு படிகள் தாம் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. கீழ்ப்படிகளை இடித்தால் மேல் படியில் நிற்பவன் கதி அதோகதி தான்!*

*இது இரண்டாவது தப்பு; அதனால் விளையும் சரிவு. அதனால் தான் மூன்றும் என்றும் இணைந்து இயக்கி ஏற்றும் படிகள் என்று சொல்லப்பட்டது. இதனால் அறிய வேண்டிய மாபெரும் உண்மை என்ன என்றால் அகவழிபாட்டிற்கு ஏறியவன் என்றும் ஏனைய தாழ்நிலை வழிபாடுகளை இழிவாகப் பார்க்கவோ, பேசவோ கூடாது. இது தான் தமிழ்ச்சமய நெறியின் அடிப்படை.*

*ஒருவன் எஸ்கலேட்டர் என்னும் படியில் ஏறினான்; 3 தளத்தில் நின்று கீழே ஏறி வந்த முதல் படிக்கட்டைப் பார்க்கிறான். ஆ! அது எங்கேயோ கீழே கிடக்குது! என்று கிண்டலடிக்கிறான். அட! பைத்தியமே! அந்தப் படிக்கட்டு தான் இப்போது உன்னை மேலேற்றிய படிக்கட்டு! அதன் மேலே தான் இப்போது ஏறி நிற்கிறாய்! கீழே நீ பார்ப்பது அடுத்து வருபவனை மேலேற்றப் போவது! என்னவோ கிண்டலடிக்கிறாயே என்று முதல் படியையும் மதிக்கக் கற்றுக்கொள் என்று சொல்வது தமிழ்ச் சமய நெறி! தமிழ்ச் சமய நெறி இலக்கியங்களில் இதற்கு சைவத்திலேயும் சரி! வைணவத்திலேயும் சரி! ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.*

*சமூகத்தட்டில் அடிநிலையில் உள்ளவன் இந்தச் சமயத்தில் முதல்படிக்கட்டில் ஏறிவிட்டான் ஆனால் போதும், அவனையே நான் கடவுள் என்று தான் மதிக்கிறேன் என்று கூட சொல்லவில்லை, வணங்குகிறேன் என்று போற்றுகிறார், அப்பர்.*

*"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்*
*அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே!" என்கிறார்*
*(சங்கநிதி பதுமநிதி எனத் தொடங்கும் பாடல்)*

*இதே மாதிரிப் பாடல் வைணவத்திலும் உண்டு. தொண்ரடிப் பொடியாழ்வார் திருமாலையில் இப்படிப் பாடுகிறார்.*

*"இழிகுலத் தவர்களேனும் எம்மடி யார்கள் ஆகில் தொழுமின்நீர் கொடுமின் கொன்மின்"*

*ஆக, குலமாவது, கோத்திரமாவது, சாதியாவது சம்பிரதாயமாவது எதுவும் தடையில்லை. மேற்சொன்ன தமிழ்ச் சமய நெறியின் மூன்று படிகளில் எவர் ஏறிவந்தாலும் இறைவன் தேடி வந்து தனிப்பெருங்கருணையோடு அருள்புரிவான் என்பதே தமிழ்ச் சமய நெறி. இதனைத் தான் அப்பர் அடிகள், ஏணிப்படி நெறி இட்டுக் கொடுத்து இமையோர் முடிமேல்.... முத்தியை முற்ற வைத்தார் முறை முறை நெறிகள் வைத்தார் என்று ஐயாறு தேவாரப் பதிகத்தில் விளக்கினார். ஆக அப்பர் ஏணிப்படி நெறி என்றதும் தம்ழ்ச்சமயப் பேரவை தமிழ்ச் சமயநெறிப் படிகள் மூன்று என்றதும் ஒன்றே. சரி! இம்மூன்றும் எப்படிப் படிகள் ஆகின்றன என்பதை இப்ப சுருக்கமாகப் பார்க்கலாம்.*

*மரபு வழிபாடு : உலகில் பிறந்த மனிதனுக்கும் அவனவனுக்கு என்று ஒரு மரபு இருக்கும். நாடு, இனம், மொழி என்ற வகையில் ஒவ்வொருவர்க்கும் ஒரு மரபு இருக்கத்தானே செய்யும். ஆக, அவ்வகையில் நாமெல்லாம் தமிழ் மரபின் மைந்தர்கள்; ஆற்றொழுக்காக இந்தத் தமிழ் மரபு இன்ன காலம் என்று வரையறை கூறமுடியாத தொன்மையான ஒரு காலத்தில் இருந்து இந்தத் தமிழ் மரபு காலவெள்ளம் பல கண்டு தன் சீரிளமைத் திறத்தோடு அமைதியாக ஆர்ப்பாட்டம் இன்றி பண்புப் பயிர் விளைத்து அன்புக் கதிர் பரப்பி அருள் மகசூலை அளவும், களவும் படாமல் ஓடிப் பரப்பிப் பெயர்ந்த இடமெல்லாம் உயர்ந்து ஓங்கிக் கொண்டிருக்கிறது. மாசில்லாத இந்த மாணிக்க மரபு தோற்றதே இல்லை; அவ்வப்போது அங்கங்கே சற்று தொய்ந்தாலும் ஓய்ந்ததே இல்லை. இது குறை பயந்த மொழி அல்ல; இறை பயந்த இறைமொழி. எனவே, இது என்றும் உள்ள தென்தமிழ் மரபு.*

*அதனால் தான் உலகின் மிகத் தொன்மையான இலக்கணமான தமிழ் தொல்காப்பியம் இந்த மரபை சிறந்தெடுத்து சீர்தூக்கிக் காட்ட மரபியல் என்றே ஒன்றை வகுத்தார்.*

இதெல்லாம் தமிழ் மரபின் பெருமையும் பீடும். இந்த மரபின் பெருமையும் பீடும் என்பவற்றை; வழிவழிதக்க வைக்க வேண்டுமே? என்ன செய்யலாம்? வழிபாடு செய் என்கிறது தொல்காப்பியம்! எதை? தெய்வத்தை வழிபடு என்கிறார் தொல்காப்பியம்.

வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து பொலிமின்

என்னும் புறநிலை வாழ்த்தே என்கிறார். தெய்வத்தை வணங்கி வழிபட்டு அது உன்னை இட, வலம் சூழ்ந்து காக்க உங்க அப்பா, அம்மா, அவர்களுக்கும் முன்னோர் எப்படி வழி வழியாகச் சிறந்து பொலிந்தார்களோ அப்படியே நீயும் வழிபட்டு பிறரை வாழ்த்தி அவர் உம்மை வாழ்த்த பொவிவான வாழ்க்கை வாழ்வாயாக என்று அறிவுறுத்துகிறார்.

எனவே, தமிழ் மரபும்படி தெய்வத்தை வழிபட வேண்டும். அந்த தெய்வம் உன்னைக் காக்கும். அந்த தெய்வத்தை ஒரு லேபில் (Lab) அதாவது விஞ்ஞான ஆய்வுக் கூடத்தில் சிறிதும் பெரிதுமான ஏதோ ஒரு கண்ணாடிக் குழாய்களில் ஏதோ ஒரு சில திரவங்களை ஊற்றி ஊற்றி நீயா கண்டுபிடித்தாய்? உன் முன்னோர்கள் தெய்வத்தின் இருப்பு இந்த உலகில் இருந்தாக வேண்டும் என்று கண்டு பிடித்தார்கள். அவர்கள் தான் உலகின் தென்கோடியில் உள்ள நம் தமிழ் முன்னோர்கள். அப்படி கண்டு பிடித்து,

"தென்னாடுடைய சிவனே போற்றி"!

என்றவர்கள், அவனே எல்லா நாட்டுக்கும் உரிய இறைவன் என்பதை Logical-ஆக உணர்ந்து, அவனையே

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! என்றனர்.
அதோடு, இந்த பொது நிலைக் கடவுளை எப்படி வழிபடுவது என்பதையும் கண்டு அறிவார்ந்த வழிபாட்டு முறைகளை தோற்றுவித்தார்கள். இவ்வாறு நம்மை நெறிப்படுத்திய நமது முன்னோர்களை நன்றியோடு நாம் வணங்க வேண்டாமா?

ஆக, தெய்வத்தை வழிபடுவதற்கு முன் நாம் தெய்வத்தைக் கண்டு காட்டிய நம் முன்னோர்களை வழிபட வேண்டாமா? இப்படித் தான் முன்னோர் வழிபாடு தொடங்கி, அது குலசாமி வழிபாடாகி, அதுவே பின்னர் குலதெய்வ வழிபாடாக ஆயிற்று.

இது நிறைந்து செழித்துப் படர்ந்து பல பரிமாண வளர்ச்சி பெற்று இன்று வளர நின்று நிலவி வருகிறது.

இப்போது இந்த முன்னோர் வழிபாடு நமக்கு எப்போது நினைவிற்கு வருகிறது என்றால் நம் இல்லங்கள் தொடர்பான திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் தான் நினைவிற்கு வருகிறது. திருமணத்திற்கு முன் குலதெய்வ வழிபாடு ஆற்றியே திருமண ஏற்பாடுகளை முன்னோர் ஆசியுடன் தொடர்கிறோம். வாப்பா! இப்பவாவது வந்தியே! என்று அவர்களும் வந்து - அதான் சூக்குமமாக வந்து - வாழ்த்திவிட்டுப் போகிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம்.

இப்படி, நம் முன்னோர் வழிபாடு, குலசாமி வழிபாடு, குலதெய்வ வழிபாடு என்றெல்லாம் பல்வேறு பரிமாணங்களில் செய்யப்படும் வழிபாடே மரபு வழிபாடு.

*சமயவழிபாடு : இது ஒரு குலத்துக்கோ, கோத்திரத்திற்கோ அன்றி அனைவரும் ஏற்றுக் கொண்ட தெய்வத்தை வணங்கும் வழிபாடு. பாருங்க! மரபு வழிபாட்டில் அவரவர் முன்னோர், குலத்தினர் என்ற அடிப்படையில் அமைகிறது. அவர்களெல்லாம் உயிரினத்தில் குணத்தில் நின்று அதில் குன்றேறிய நமது முன்னோர். ஆனால் சமய வழிபாட்டிற்கு வரும் போது அங்க சாதி, குலம், பிறப்பென்னும் குறுகிய வட்டங்கள் எல்லாம் மாயமாய் மறைந்தோடி விடுகின்றன. இதைத் தான் மணிவாசகர்.*

*"சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேன்"*

*என்று பாடுகிறார். என்ன அவர் கூறும் அறிவுரை என்றால் முன்னோர் வழிபாடு தேவை தான், "மூவேழ் சுற்றம் முரண் உறுநரகிடை ஆழாமே அருள் அரசே போற்றி" என்று பாடியவன் நான். இறந்த பின்னும் முன்னோர்களை உலகில் கற்பிக்கப்பட்ட சாதிகளை அவர்களுக்கு ஒட்ட வைத்து சண்டையிட்டுச் சாகலாமா? என்ன அறிவீனம்? அந்தச் சுழியில் அடைத்துத் தடுமாறலாமா என்கிறார். என்ன செய்யணும்? நமக்கு முன்னோர் என்ற அளவில் வழிபடுங்கள்! அவர்கள் மேலுலகில் இன்புற்று வாழ இறைவனிடம் அவர்களுக்காக வேண்டுங்கள். அதைத் தான் மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆழாமல் அருள் அரசே என்று இறைவனை வேண்டிப் பாடினேன். நாம் அவர்களுக்காக வேண்டினால் அவர்கள் நம் திருமணத்திற்கு வந்து அவர்கள்.*

*தங்களுக்கு இயன்ற அருளையும் ஆசியையும் திருமண இணையர்க்கு வழங்கி வாழ்த்திச் செல்வார்கள். இவ்வாறு நமக்குரிய முன்னோர்களின் வழிபாடு மெல்ல மெல்ல அவர்களையும் உள்ளடக்கிய எல்லோர்க்கும் உரிய தெய்வ வழிபாடாக மாறுகிறது. இது தான் சமய வழிபாடு. சமய வழிபாடுகளை எப்படிச் செய்வது? இதற்கென நிறைய சமய நூல்கள் தமிழில் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றைக் கண்டு அவரவர் அறிவை ஈர்த்த வழிபாடுகளைச் செய்யலாம். அதையும் தொல்காப்பியம் கூறுகிறது.*

*மாயேன் மேயகாடுறை உலகமும் சேயோன் மேயமைவரை உலகமும் வருணண்மேய பெருமணல் உலகமும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே என்கிறார் தொல்காப்பியர்.*

*முருகனை வணங்குகிறாயா, வணங்கிக்கோ, திருமாலை வணங்குகிறாயா வணங்கிக்கோ, வேந்தன் அதாவது தேவர்களுக்குகெல்லாம் தேவனாகிய சிவனை வணங்குகிறாயா சிவனையே வணங்கிக்கோ, கடல் தெய்வமான வருணனை வணங்குகிறாயா, வருணனை வணங்கிக்கோ என்று அவரவர் சிந்தைச் சுதந்திரத்தை வாரி வழங்குகிறார் தொல்காப்பியர்! என்ன புலவரே! கடவுள் ஒருவர் என்கிறார்கள்! நீங்க நாலைஞ்சு கடவுள் பேரைச் சொல்கிறீர்களே என்று கேட்டால், அட! எல்லாம் ஒன்று தானப்பா! அந்தந்த ஊர்ல அவர்கள் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே என்று தானே பாடி இருக்கிறேன் என்கிறார்.*

*உனக்கு விருப்பமான கடவுள் பெயரைச் சொல்லு! எந்தப்பேர்? அது பெரிய விஷயமில்லை; கடவுளை வாழ்த்து அது தான் முக்கியம்! அதனால் தான் இன்னொரு நூற்பாலில் " கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே!" என்று பாடினேன் என்கிறார்.*

*பாருங்க! வழிவழி சிறந்து பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தில் மரபு வழிபாட்டைப் போற்றிக் கூறியவர் புறநிலை வாழ்த்திற்கும் மேலாக கடவுள் வாழ்த்து என்று ஒன்று இருக்கிறது;*

அதை உனக்கு விருப்பமான இந்திந்த நிலத்திற்கேற்ப பெயர் சொல்லி வாழ்த்திக் கொள் என்று கூறி மரபு வழிபாட்டுக்கு மேல் பரிணாம வளர்ச்சியில் சமய வழிபாட்டுக்கு அடி போடுகிறார் தொல்காப்பியர்.

அகவழிபாடு : முன்னே சொன்ன மரபுவழிபாடும் சரி! சமய வழிபாடும் சரி! இவை ஒன்றிற்கு ஒன்று ஏற்றம்; அவ்வளவு தான்! ஆனா இந்த இரண்டுமே புறநிலை வழிபாடுகள் தாம். எனவே இவற்றைப் புறவழிபாடுகள் என்றே கூறிவிடலாம். என்னங்க! கடவுளை எவ்வளவு நாள் வெளியிலேயே காக்க வைப்பீங்க! உள்ளே கொண்டு வாங்க! பாவம்! கடவுள், உள்ளவா என்று எப்ப கூப்பிடுவ என்று காத்துக் கிடக்கிறார்! வேண்டுவார்க்கு வேண்டுவது ஈபவன் அவன்! நாம தான் ரொம்ப நாளா, ஏன், ரொம்ப பிறவிகளா அவரைக் கண்டுக்காம ஊர் சுத்திகிட்டு இருக்கோம்!

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத்தேவனை என் உள்ளே தேடிக் கண்டு கொண்டேன்"

என்று வழிகாட்டுகிறார். அப்பர், அடிகள்! அது சரி! நாம் எப்ப சாமியைத் தேடினோம்! உன்னைப் பார்க்க முடியாமல் தவிக்கிறேனே! என்று அவன் முன் அழுதிருக்கோமா? வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்று பாடி இருக்கிறார்களே! இவன் இப்படி அறிவீனமா திரியறானே என்று சாமி ஒருவேளை அழலாம். இப்படி சாமியை அழவைக்கற ஆளுங்க நாம்!

சரி! எப்படியோ, புத்தி வந்து சரியான முறையிலே தேடணும்னா உள்ளுக்குள்ளே உருவமாக அல்ல; ஒளியாக இறைவனைத் தேடணும்! ஊனினை உருக்கி உன்னொளி பெருக்க வேண்டும் என்று பெரியவங்க சொல்றாங்க! பெரிசுங்க ஏதோ சொல்லிட்டுப் போகட்டும் என்று நாம என்ன செய்கிறோம்? ஊனனை முடிந்த அளவு பெருக்கி, உள்ளொளியை முடிந்த அளவிற்குச் சுருக்குகிறோம்! இதென்ன வாழ்க்கை! விடுங்க எல்லாவற்றையும்! உள்ளே போங்க! அதைத்தான் யோகம் என்னும் அகவழிபாடு என்று கூறுகிறோம். யோகம் என்ற சொல் வடமொழி! தமிழில் ஓகம் என்றதை வடவர் யோகம் என்று திரித்துக் கொண்டார்கள்!

இந்த ஓகத்திற்கு எட்டு உறுப்புக்கள் உண்டு இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி. ஒன்று கூடத் தமிழ்ப் பெயர்கள் இல்லை. உண்மையில் இவை எல்லாவற்றிற்கும் தமிழில் சொற்கள் உள்ளன என்று தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டி ஓகம் தமிழரது நெறி என்று நிலை நாட்டி இருக்கிறார்.

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில், புறத்திணை இயல் என வருகிறது. அதில் வாகைத் திணை என்று ஒன்று வருகிறது. அதாவது வாகை என்றால் வெற்றி. இந்த வாகைத் திணையில் பல்வேறு வகை வெற்றிகளைக் குறித்து கூறி வந்த தொல்காப்பியர், அதில் ஆக உயர்ந்த வெற்றியான யோகமாகிய அகவழிபாட்டில் ஒருவர் இறைவனையே பெறுகின்ற வெற்றியைக் கூறுகிறார்.

"நாலிரு வழக்கில் தாபத பக்கமும்"

என்ற வரியில் தாபதம் என்ற தமிழ்ச் சொல்லால் யோகத்தைக் குறிக்கிறார். இந்தத் தாபதம் என்ற யோகம் எட்டு உறுப்புகளை உடையது என்று ஏற்கெனவே அதன் வடமொழிப் பெயர்களைச் சொன்னோமா? ஆனால் உரை எழுதிய நச்சினார்க்கினியர் அவற்றின் தமிழ்ப்பெயர்களைத் தருகிறார்.

"இனி ஓகம் செய்வார்க்குரியன, இயமம், நியமம், ஆதனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி (இதற்கு நொசிப்பு என்றும் தமிழில் பெயர் உண்டு)"

இயமம்

தீயவைகளை விலக்குவது. இயற்றுவதால் இது இயமம்.

*இதைக்கடின முயற்சியால்*

*நியமம்*

*ஆதனம்*

*வளிநிலை*

*தொகைநிலை*

*இது நியமித்தல் என்ற தூயதமிழ்ச் சொல். இப்படி நற்குணங்களில் நில் எனறு நியமித்தது நியமம். இருக்கை; ஆதனம் எனப்படும். ஆதனம் என்ற சொல் வடமொழியில் ஆசனமாயிற்று. பிராணாயாமம் என்பதன் மூலத்தமிழ்ச் சொல் வளிநிலை.*

*பிரத்தியாகாரம் என்பதன் தமிழ் மூலம்*

*பொறைநிலை*

*தாரணை என்பதன் தமிழ் மூலம்*

*நினைதல்*

*சமாதி*

*தியானம் என்பதன் தமிழ் மூலம்*

*ஆதியுடன் சமமாய்ப் பொருந்தல், ஆதி சமம் இரண்டும் தமிழ் இதனை நொசிப்பு என்றும் தமிழ்ர் கூறுவர்.*

*இதிலிருந்து அதாவது நச்சினார்க்கினியர் உரையில் இருந்து யோகம் என்ற அகவழிபாட்டை வடவர் (hijack) ஐச்சாக் செய்து கொண்டனர் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது சிந்து வெளி நாகரிகம் தமிழர் நாகரிகம் என்று உலகமே ஒப்புக் கொண்ட உண்மை. சிந்து வெளியில் அகழ்வாய்வில் கிடைத்த ஒரு முத்திரை ஒரு முனிவர் காளையுடன் இருக்க யோக நிலையில் அமர்ந்ததைக் காட்டுகிறது. இதுவரை வடவரி யோகிருந்த பழஞ்சான்றுகள் சிந்து வெளி நாகரிக காலத்திற்கு முந்தியவை எதுவும் இல்லை. எனவே, இந்த யோகம் என்பதும் அகவழிபாடு என்பதும் தமிழர் மரபினதே என்று தெளிவாகத் திண்ணமாகிறது.*

*இவ்வாறு பரந்துபட்ட மூன்று நிலைவழிபாடுகளைக் கூறுகளாக உடைய தமிழ்ச் சமய நெறியைத் தான் இன்று மாநாடு போட்டு வெளிப்படையாக உலகுக்கு எடுத்துக்காட்டுகிறோம். இது ஆக உயர்ந்த தமிழ்ப்பணி! இதை முன்னெடுக்கும் இந்த தமிழ்ச்சமயப் பேரவைக்கு எனது பாராட்டுகள்!*

*வாழ்க தமிழ்ச்சமயம் என்று வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்!*

*மு. பெ. சத்தியவேல் முருகன்.*



# மலர்மிசைப் பேரொளி
# மாசறுக்கும் ஒளிநெறி

**தமிழியல் ஆய்வறிஞர் இர. திருச்செல்வனார்**
தலைவர்
தமிழியல் ஆய்வுக் களம், மலேசியா.

*நிலம் - நிலமிசை–*
*மலர்– மலர்மிசை– மலர்மிசை ஏகினான்*

*மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார் – குறள் 3*

*இக்குறளில் வருகின்ற 'நிலம்' என்பது நாம் வழக்கமாகப் பார்த்தும் குறிப்பிட்டும்கொண்டுள்ள நிலம் அன்று. 'மலர்' என்பதும் நாம் அறிந்துள்ள வேறெந்த மலர் அன்று.*

*'மலர்மிசை' என்பது தன்பால் இருந்துவந்த மாசற்று இருள்நீங்கி உள்ளொளி மலர்தலால் அடைவருவது. அது தனக்குள் 'யான்' என்னும் அகப்பற்றும் 'எனது' என்னும் புறப்பற்றும் ஆகிய இருவகைப் பற்றுகளுமில்லாத பற்றற்ற பற்றுநிலைக்குச் (வேண்டுதல் வேண்டாமை இல்லாத நிலத்துக்குச்) சென்று; அந்த நிலையினில் திரிபு அடைந்திடாமல் (நிலைபெயர்தல் ஆகிய நிலைமாறுதல் இல்லாமல்) அதாவது, சலனமற்ற சமத்தில் திரையற்ற (அலைதல் இல்லாத) நீர்போல் அடங்கப்பெற்ற பின்னர்; ஆன்மா நிலைகொண்டிடும் இடம் உச்சித் தாமரை என்று உருவகித்துச் சொல்லப்படும். அந்த இடத்துக்கு– தலத்துக்கு நிலம் எனப் பெயர்.*

*அங்கு, ஆன்மா அகமலர்தல் ('தான்' என்னும் ஆணவத்தை நீக்கியவிடத்து மறைந்துகிடந்த அகவொளி ஆகிய ஆன்மத்து ஒளிநிலை மலர்ச்சியுறுதல். இது திருமூலர் கூற்றுப்படி "தான் என்ற பூவை அவன் அடி சாத்துதல்" என்பதாகும்.) ஆன்மா அகமலர்தல் பெற்றிருக்கும் அந்த நிலத்தினைப் பெயராப் பெருநிலன் என்று சங்கநூல் சுட்டும்.*

*அஃது ஒவ்வொருவதம் உடம்புக்கு உள்ளாகவே அடையப் பெறுவது பற்றியே "மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால் ஈசனைக் காட்டும் உடம்பு" என்று அறிவை ஔவையார் அடையாளப்படுத்தியருளினார்.*

*அந்த நிலமிசை – நிலத்தினிடமாக இருந்து ஆன்மா மலர்ந்து ஒளிசெய்கின்ற பேரொளிப் பெருநிலைக்கு 'மலர்' என்று பெயர். அந்த மலர்ந்த ஆன்மத்தினிடத்து - வேறற அதாவது இரண்டறக் கலந்து ஒருமைநிலையாய்த் திகழ்ந்திருக்கும் இறைவன்தான் 'மலர்மிசை ஏகினான்'.*

அங்கு அந்த மலர்மிசையில் ஏகினானின் மாணடியில் சேர்ந்நந்தவர்கள் மரணமில்லாமல் நீடுவாழ்வார்கள். இந்த மலருக்குப் பலவாகப் பெயர்கள் உள்ளன. அதனுடைய விரிந்திருக்கும் பேரொளியை ஆயிரத்தெட்டிதழ்த் தாமரை எனவும் கூறுவர்.

சடை – சடையன் – சடைச்சி

அந்த ஆயிரத்தெட்டிதழ்த் தாமரை மாமலர் என்பது மட்டுமல்லாமல் அந்த 'மலர்மிசைப் பேரொளி' எனும் 'அருட்பேரறிவு' அமைப்பினைச் 'சடை' எனும் சொல்லால் குறிப்பதும் தமிழர் மெய்யியல் பெருவழக்காகும்.

அந்த ஒளிச்சடை அல்லது சடையொளி என்பது கதிரவனின் ஒளிவிரிப்பினை ஒத்த அகத்து ஒளிவிரிப்பு நிலையானது பார்ப்பதற்கு விரித்த சடையினைப்போல் இருக்கின்ற ஒப்புமையைக் கண்டு விரிசடை எனப்பட்டது. அதுவே படர்சடை எனவும் போற்றப்பட்டது; புரிசடை எனவும் குறிப்பிடப்பட்டது. ஒளிக் கற்றையைப் போலத் தோற்றுவதால் கற்றைச் சடை,... என்றெல்லாம் உருவகப்படுத்திக் கூறப்பட்டது.

அதனைப் ஆண்பாற்படுத்திக் கூறும் நிலையில் சடையன் - சடையோன் - சடையவன் எனக் கூறப்பெற்றது. அவ்விடத்திற்கான மாதவம் 'படர்சடை மாதவம்' என விதந்து கூறப்பட்டது. இப்பெயர்களெல்லாம் சிவநெறியிலும் சித்தநெறியிலும் மிகப் பரந்த வழக்காறு உடையன.

பொற்சடை, செஞ்சடை, நீள்சடை - நெடுஞ்சடை,... என அது விரிந்துபட்டது. சொற்களே பல - பலவாறு; பொருள் நிலையோ ஒன்றுதான் - ஒன்றேதான். இதையே பெண்பால்படுத்துகையில் சடைச்சி என்னும் வழக்கும் உள்ளது.

நந்தி – இலங்கம் - பொன்

மேலும், மலர்மிசையின் ஒளிசார்ந்த - ஒளியார்ந்த நிலையில்தான் அதுவே 'நந்தி' (ஒளிமயமான மெய்ப்பொருள்) எனப்பட்டது. "உய்யக்கொண்ட ஒண்சுடர் நந்தி" என்று திருமூலர் குறிப்பிடுவதும் காண்க. அதே ஒளியின் அடிப்படையில்தான் 'இலங்கம்' என்றும் அது குறிப்பிடப்பட்டது. [ "எட்டும் இரண்டும் கூடியே இலிங்கமான தேவன்" என்று சிவவாக்கியர் குறிப்பதைக் கொண்டறிக. ] "சீவன் சிவலிங்கம்" என்பதில் சீவனில் இலங்குகின்ற சிவம் – சீவனில் சிவம் இலங்கும் என்னும் மெய்மம் "விளக்கில் விளக்கு" என்னும் ஒத்த ஒரே பாங்கில் எடுத்து உணர்த்தப்படுவதும் காண்க.

பின்னும் அது, 'பொன்' எனக் குறிப்பிடப்பட்டது. காண்க: செம்பொன், இலங்கிய பொன், பொன்மலை, பொற்குன்று, செம்பொற்சடை, ...

சுடர் - சோதி - விளக்கு

இவையும் அல்லாமல் அது சுடர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மலர்ச்சுடர் [ "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே" – திருவாசகம்], பரஞ்சுடர், மெய்ச்சுடர், செஞ்சுடர், ... என்பவற்றைக் கொண்டு உணர்க. அச்சுடர்தான் 'சோதி' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எ-டு:- மாமணிச்சோதி / மாமணிச் சோதியன், செம்பொற்சோதி, சோதி மாமலை, சோதி வானவன், அலகில்சோதி, அருட்சோதி, அருட்சோதிதெய்வம், அருட்பெருஞ்சோதி ... எனக் குறிப்பிடப் பெற்றது.

இவ்வகையிலேயே உயிர்களிடத்து இருக்கின்ற அகத்துக் கறுப்பு ஆகிய இருள்களைந்து விளக்கம் செய்யும் இறையினது பண்பின் அடிப்படையில் 'விளக்கு' எனவும் ஆழ்ந்த ஆன்மப் பொருளார்ந்த சொல்லால் அது குறிப்பிடப்பெற்றது. எ-டு:-விளக்கில் விளக்கு, ஒளிவளர் விளக்கு, தேசு விரித்திடு தெய்வமணி விளக்கு, அருள்விளக்கு, பொய்யாவிளக்கு, காளா மணிவிளக்கு, ...

குன்று - கோயில்
இனி, அதற்கும் அப்பாலாக மாசுமறுவற்ற ஒளிதரும் ஒளிமணிகளின் பெயராலும் அது குறிக்கப்பட்டது. மணி என்றும் போற்றிக் கூறப்பட்டது. எ-டு: மணிக்குன்று, திரள்மணிக் குன்று,... இஃதல்லாமல், அது கோயில் என்றும் குறியீடு செய்யப்பெற்றது. காண்க:- ஆயிரத்தெட்டு மாற்றுப் பொற்கோயில்,...

வெளி - அம்பலம் - அம்பரம் - மன்று - மன்றம் -
மன்றில் - மன்றுள் - சபை

எல்லையில்லா அறிவுப் பெருவெளி எனும் பொருளில் அஃது அம்பலம் என்றும் குறியீடு செய்யப்பெற்றது. காண்க: ஆணிப் பொன்னம்பலம், வெள்ளியம்பலம், பேரம்பலம், சிற்றம்பலம் (திருச்சிற்றம்பலம்), சித்தம்பலம் (சித்தம்பரம் > சிதம்பரம்), திருவம்பலம்,... எனப் பல பெயர்கள் ஒளித்தொடர்பிலும் வெளித்தொடர்பிலும் அறிவறிந்தோரால் பல்வேறு காலங்களில் இடப்பட்டுள்ளன.

அம்பலம் என்பதற்கு இனமாக உள்ள சவை - சபை, மன்று - மன்றம் - மன்றில் - மன்றுள்,... என்ற சொற்களாலும் விரிவாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவை யாவும் ஒன்றே ஒரே பொருள் குறிப்பனவே.

பொற்சபை, திருமன்று, அறிவுமன்று, மணிமன்று - மணிமன்றம்,... சிற்சபை என்பது சித்து என்ற தமிழ்ச்சொல்லின் சமற்கிருதக் கடைச்சிதைவு வடிவும் சபை எனும் மறுபகுதித் தமிழ்ச்சொல்லும் (சித் + சபை > சிற்சபை) சேர்ந்தமைந்த இருபிறப்பிச் சொல். வெளி என்னும் சொல்லும் அம்பலம் என்ற பொருளமைப்பில் இதனைக் குறிப்பதற்கு ஆளப்பட்டுள்ளது. எ- டு: வெட்டவெளி, கடுவெளி, அருள்வெளி, ஞானவெளி, ...]

ஆரமும் பூவும்

ஆரம் என்பது மிகப் பெரிதும் வட்டமாய் அமைந்து நிற்கும் அமைப்பினைக் கொண்டது. இது புறவுலகத்திற் காணப்படுகின்ற தாமரைத் தண்டினோடு பொருந்தி நிற்கின்ற இதழ்களைக் கொண்டதாக உள்ள தாமரைப் பூவிற்கு ஒப்பாக இருக்கின்றது.

இனி, புறவுலகத்துத் தாமரைப் பூ தண்டுடன் பொருந்தியதாக இருக்கின்றது. அகவுலகத்துத் தாமரைப் பூ என்பது தண்டுடன் பொருந்தியில்லை என்பதே அவற்றிடையே உள்ள வேறுபாடு. இந்த அமைப்பியல் ஒப்புமைகளையெல்லாம் மனத்திற் கொண்டுதான் திருமூலர் மிக அழகாகப் பின்வருமாறு பாடி அருளிச்செய்துள்ளார்.

பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே

- திருமந்திரம் 837

*தாமரைப் பூவைத் தாங்கி நிற்கின்ற தண்டுக்கு உள்துளை இருக்கின்றதைப் போல், மாந்த உடம்பு நிற்பதற்கு முதுகுபுறத்து ஊடுசெல்கின்ற தண்டுக்கும் உள்துளை உள்ளது. இந்த உள்துளை அமைப்பு ஒற்றுமையைக் கொண்டு அதற்குத் தூபி என்ற பெயரும் அமைந்துள்ளது.*

*தூபி என்பது புறத்தே நிறுத்தப்படுகின்ற புகழ்த்தூண், வெற்றித் தூண் போன்றவற்றைக் குறிக்கும். அது நடுவில் துளையுடையதாக இருப்பதுகொண்டு; இவ்வாறு ஒப்புமைகண்டு முதுகந்தண்டுக்குத் தூபி என்ற பெயரும் அமையப்பெற்றுள்ளது.*

*ஆய்வுக் குறிப்பு :- [ தூம்பு > தூம்பி > தூப்பி > தூபி என உள்துளைப்பு வினைக்கருத்து உள்ள தமிழ் வேரிலிருந்து பிறந்த தூய தமிழ்ச்சொல் தூபி. அது வடதமிழர் வழிவந்த வடதிரவிடர் வழக்கில் இன்று பெரிதும் ஆளப்படுதல் பற்றி; அதன்மீது தென்னகம்வாழ் தொல்தமிழர்க்கு இருந்து வந்த மரபுரிமை என்பது இல்லையாகிவிட மாட்டாது. ஆராய்ச்சி இல்லாதார் இதனை வடமொழிக்கு உரிமைப்படுத்துவர். இது குறித்து சொல் அறிவியல் 4-5 எனும் என் நூலில் விரிவாக அறியலாம்.]*

*ஒளிபெறும் வகை*

*புருவ நடுவில் அமைந்திருக்கும் ஆணைச் சக்கரத்தில், உயிருணர்வை ஆக்கம்பெறச் செய்து; அண்ணாக்குக்கு உட்பகுதியில் அமுது ஊறச்செய்து; பிடரியின் வழியே தலையை அடையும் மூலக் கனலால், பிடரியில் உள்ள அழல்கலை சார்ந்த அழல்கண் (பிடரிக்கண் - வட. அக்கினிக் கண்) ஒளிபெறும்.*

*அடுத்து அதனைத் தொடர்ந்து முறையே கதிரும் மதியும் ஆகிய வலக்கண்ணும், இடக்கண்ணும் ஒளிபெறும். இம் மூன்று ஒளியும் இணைந்து புருவ நடுவில் பேரொளியாக உணரலாகும், விளங்கும்.*

*இதனை உயிருணர்வாலும், கட்புலனாலும் இவற்றுக்குத் தொடர்புடைய மூச்சு இயங்கும் தலைமை வழிக்குத்தான் தாமரைக் கொடி எனப் பெயர். இத் தாமரைக் கொடிக்கு அதாவது அதன் தண்டுக்கு உள்துளை இருப்பதைப் போல, மூச்சு இயங்கும் தலைமை வழியாகிய முதுகந்தண்டுக்கும் உள்துளை இருப்பதுகொண்டு அதற்குத் தூபி என்ற பெயரும் அமைந்திருக்கின்றது. பொதுவாகத் தூபியின்மேல், குமிழ்ப்பாக அமைக்கப்பெறுகின்ற வடிவினைப் போல, பிடரிக்குத் தொடர்புடையதாகவே முதுகந்தண்டும் மூளையும் அமைந்திருப்பதைக் காணலாம்.*

*எனவே, மூச்சுக் காற்றைக் கொண்டு மேலேறிடும் மூலக்கனல் - அதற்கு வழியாக இயங்கும் முச்சுடர் மண்டிலம் எல்லாம் இவ்வாறாக ஒப்புமை காட்டி உரைப்பதற்கு மிகவும் ஏற்ற வடிவிலே இருப்பதைக் கொண்டுதான், இப்பெயர்கள் யாவும் அமைக்கப்பெற்றுள்ளன என்பதைப் பொறுத்துச் சிந்திக்கும் யாருமே நன்கு தெளியலாகும்.*

*இனி, தாமரை இலையின் மீதும் பூவின் மீதும் படுகின்ற நீர் அவற்றினிடத்து ஒட்டுவதில்லை. குறிப்பாக இலையினைக் கொண்டு; உலகியலில் வேர்கொண்டு தொடங்கப்பெற்றாலும் - அதாவது, மற்றவர்களைப் போல உலகியல் வாழ்க்கையிலே இருந்து வந்தாலும், உண்மையான ஓகியின் உள்ளம் உலகத்தில் ஒட்டியும் ஒட்டாது; அது விலகியதாகவே இருக்கும் தன்மைக்குத்* ***தாமரை இலைமேல் தண்ணீர்*** *என்று ஒப்புமை கூறுவது* ***பழந்தமிழ மெய்யில் மரபு.***

*தாமரையின் இலையிலே தண்ணீர் தங்காத*
*தன்மைபோலச் சகத்தாசை தள்ளி விட்டெங்கும்*
*தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்*
*தொழுது தொழுது தொழுது ஆடுபாம்பே!*

*- பாம்பாட்டிச் சித்தர் :70*

*பற்றற்ற பற்றினைப் பற்றுதற்கும் - அவ்வண்ணமாக*
*வாழ்தற்கும் தாமரைப்பூ மிகவும் ஒத்தமைகிறது*

*தாமரையின் பல்வேறு பண்புகள் உயிருக்கும் பரத்துக்கும் இயைபு காட்டி உணரவும் - உணர்த்தவும் பயன்படுதல் பற்றியும், அதன்கண் பொலிந்திருக்கும் பிற பூக்களுக்கு இல்லாத ஒண்மை (ஒளி) நலம் குறித்தும் அது தெய்வத்தன்மை உடைய பூவாகப் போற்றப்பெறுகின்றது.*

*பற்றற்ற பற்றினைப் பற்றுதற்கும் - அவ்வண்ணமாக வாழ்தற்கும் தாமரைப்பூ மிகப் பெரிதும் ஒத்தமையும் பான்மையினால் தமிழ் இறையியல் மரபில் அதற்கெனத் தனித்ததோர் மாண்பார்ந்த இடமும் தரப்பெற்றுள்ளது.*

*இத்துணைச் சிறந்த ஞானச் சிறப்புடைமை பற்றி; அதனை ஆன்றோர் ஞான மலர் - அறிவு மலர் என்றும், பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை என்றும் பலபடப் பாராட்டுவாராயினர். தாமரையின் பண்பு உயிருக்கு மட்டுமன்று, பரம்பொருளுக்கும் ஒப்புமைகூறப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிவவாக்கிய பெருமானார் மிக அழகாக அதனைக் கையாண்டுள்ளார் பாருங்கள்!*

*நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓரிலை*
*நீரினோடு கூடிநின்றும் நீரிலாத வாறுபோல்*
*பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்*
*பாரினோடு கூடிநின்ற பண்புகண்டு இருப்பிரே*

*- சிவவாக்கியம் 300*

*தவளத் தாமரை தாதார் கோயில்*
*அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே*

*- புறப்பொருள் வெண்பா மாலை*

*முத்துப்போன்ற வெள்ளொளி பொலிந்திருக்கும் ஒண்டாமரைப் பூவில் வீற்றிருக்கும் அறிவு வடிவாக அறியவரும் அறிவுத் தெய்வத்தை, அருமை சான்றதாகிய தமிழைப் பெறுதவதற்காக போற்றித் தொழுகின்றேன் என்பது இப் புறப்பொருள் வெண்பாமாலை திருப்பாட்டின் சாரம்.*

***ஐயனாரிதனார்,*** *தம் புலமையின் வளமையெல்லாம் பொதுளித் ததும்பச் தண்டமிழ்ச் சொற்சுவையும் ஒண்டமிழ்ப் பொருட்சுவையும் பயில்தொறும் பயில்தொறும் அகத்தினிற் சுரக்கப் படைத்த புறப்பொருள் வெண்பாமாலை என்னும் புறப்பொருள் இலக்கண இலக்கிய நூலுக்கு யாத்து உள்ள இக் கலைமகள் வணக்கப் பாட்டும் மேற்சொல்லி வந்த தொல்தமிழ் அறிவு மரபினுக்கு ஒத்து நிற்பதைக் காணுங்கள்.*

'தவளத் தாமரை தாதார் கோயில்' என்பது எத்தகைய சீர்த்த அறிவான செறிவான அழகான அருந்தமிழ்த் திருத்தொடர். இதனை அறிவறிந்து ஆக்கி நமக்களித்த ஐயன் ஆரிதனார் சொல்லிய திறத்தினை உணர்ந்து உணர்ந்து உள்க உள்க உள்ளம் உருகவில்லையா?

ஊத்தைச் சடலமென் றெண்ணாதே-இதை
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே
பார்த்த பேருக்கு ஊத்தையில் லை-இதைப்
பார்த்துக்கொள் உன்றன் உடலுக்குள்ளே!

- கொங்கணச் சித்தர்: 24

உச்சிக்கு நேராய் உண்ணாவுக்கு மேல்நிதம்
வைத்த விளக்கும் எரியுதடி
*அச்சுள்ள விளக்கு வாலையடி அவி
யாமல் எரியுது வாலைப் பெண்ணே!

-கொங்கணச் சித்தர்: 25

*அச்சு = மூலம். மூலம் முதலாக உச்சி வரையுள்ள இறை இயைபினைக் கண்டு தெளிந்து உய்யுமாறு அறிவுறுத்துகின்றது இந்தத் திருப்பாடல்.

இந்த விதத்திலே தேகத்திலே தெய்வம்
இருக்கையில் புத்திக் கறிக்கையினால்
சந்தோட வாலையைப் பாராமல் மனிதர்
சாகிற தேதடி வாலைப்பெண்ணே!

- கொங்கணச் சித்தர்: 39

பற்றற்று நீரில் படர்தா மரைஇலைபோல்
சுற்றத்தை நீக்கிமனம் தூரநிற்பது எக்காலம்?

- பத்திரகிரியார் புலம்பல்: 54

அந்தரத்தில் நீர்பூத்து அலர்ந்தெழுந்த தாமரைமேல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்பது எக்காலம்?

- பத்திரகிரியார் புலம்பல்: 204

செந்தா மரைத்தாளைத் தினந்தினமும் போற்றாமல்
அந்தரமாய் நின்றங்கு அலைந்தேன் நான் பூரணமே

- பூரணமாலை: 86

இவ்வளவையும் ஒன்றாக வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால், ஓர் ஒற்றைப் பேருண்மை தானாகப் புரியவரும். அதாவது, மூலப் பெருந்தமிழ்த் திருக்கூட்ட மரபினர் கண்டருளிச்செய்துள்ள 'உயிர்மெய் இறைநெறி' ஆகிய ஊனுடம்புக்குள் ஈசனைக் கோயில்செய்து எழுந்தருளுவித்து வழிபட்டுச் சிவமயம் ஆகிடும் "கடவுள்நிலை அறிந்து அம்மயம் ஆதல்" என்று தமிழரிடையே வாழையடி வாழையென ஒளிநெறியே இடையறாது வந்து கொண்டுள்ளது.

இங்கிருந்து பார்ப்பவர்களுக்கு வள்ளல் பெருமானார்தம் திருவுள்ளம் நன்றாக விளங்கிப் புரிந்துவிடும் அல்லவா? ஆன்ம மாய வேறுபாடுகள் நீங்கி; ஆன்மநேய ஒருமைப்பாடு ஓங்குக.



## சைவ சமயம்

**திருமுறைச் செம்மல்,**
**சைவ சித்தாந்த இரத்தினம்,**
**முனைவர் தர்மலிங்கம் நடராசனார்**

*மாந்தரை மாக்களிலிருந்து வேறுபடுத்திச் சமைப்பது சமயம். சமைப்பது என்றால் பக்குவப்படுத்துவது அல்லது பண்படுத்துவது என்று பொருள். மாந்தனைச் சராசரி நிலையிலிருந்து இறைத் தன்மை நிலைக்குச் செவ்வியுறச் செய்வது சமயம். சைவ சமயம், ''நாம் யார், நம்மைப் படைத்தவன் யார், எதற்காக நாம் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், நம்மைப் போன்றே உலகத்திலுள்ள இதர உயிருள்ள பொருள்களும் உயிரற்ற பொருள்களும் ஏன் படைக்கப்பட்டுள்ளன?'' என்ற கேள்விகளுக்கு விடையளிக்கின்றது.*

*''நான் யார்? என்ற கேள்விக்கு, விடை காண வேண்டுமானால் எதுவெல்லாம் நானல்ல என்று பதில் சொல்லிக் கொண்டிருக்கிறதோ, அதுதான் நீ என்று சைவ சமயம் சொல்கிறது. என் தலை நானல்ல, என் மூளை நானல்ல, என் கண் நானல்ல, என் உடம்பு நானல்ல, என் மனம் நானல்ல என்று சொல்லிக் கொண்டிருக்கிறதே, அதுதான் நீ என்கின்றது. அஃது எதுவெனில் உயிர். நான் என்பது உயிர். என் உயிர் உடலில் தங்கியிருக்கின்றது. அஃதுவே என் உடல் உறுப்புக்களையும் என் மனத்தையும், என் அறிவையும், என் சிந்தையையும் என் அகங்காரம் என்ற மனவெழுச்சியையும் செயல்படுத்துகின்றது என்று சைவ சமயம் உணரச் செய்கிறது.*

*மாந்த உயிர்கள் தங்கி இருக்கின்ற இந்த உடம்பு, மற்றும் உயிருக்குப் பொருத்தப் பட்டுள்ள மனம், அறிவு, சிந்தை மனவெழுச்சி என்ற அகங்காரம் போன்ற கருவிகள் மாந்தனால் செய்ய முடியாதவையாக மாந்த ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றலால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று சைவ சமயம் உணர வைக்கின்றது. இப்பேராற்றல் பேர் அறிவினைத் திருவள்ளுவர் ''வாலறிவன்'' என்று குறிப்பிடுகின்றார். இறைவன் என்ற அப்பேரறிவுதான் நமக்கு உடம்பைத் தந்தது என்பதனை, ''என்பிருத்தி நரம்பு தோல் புகப்பு எய்திட்டு என்னை ஓர் உருவம் ஆக்கி'' என்று சைவ சமய அடியார் திருநாவுக்கரசு அடிகள் குறிப்பிடுவார். இறைவனை நன்றியினால் வழிபட வேண்டும் என்று சைவ சமயம் குறிப்பிடுகின்றது. ''வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை, சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே'' என்று திருநாவுக்கரசு அடிகள் குறிப்பிடுவார்.*

*இவ்வுலகில் உடம்பில் உயிர் இருந்து வாழ பெற்றோரைக் கருவியாகக் கொண்டு இறைவன் நம்மைத் தோற்றுவித்திருக்கிறான் என்பதனால் பெற்றோரை வணங்குதல் முதன்மையானது எனவும் அவரை அவர்தம் சாநாள் வரையிலும் அன்புடன் பேணிக் காத்தல் வேண்டும் என்றும் சைவ சமயம் குறிப்பிடுகின்றது.*

அன்பின் வடிவாக இருக்கின்ற இறைவனைப் போன்று அன்புநிலை பெறுவதற்கு உடன் பிறப்புக்களையும் உறவினர்களையும் நண்பர்களையும் மனைவி மக்களையும் வாழ்நாள் முடியும் வரை இறைவன் கூட்டி வைத்துள்ளான் என்று சைவ சமயம் குறிப்பிடுகின்றது. எனவே நம் உயிர் சிறப்பு நிலை அடைவதற்கே நம் பெற்றோர், மனைவி மக்கள், உற்றார் உறவினர், நண்பர் போன்றோரை இறைவன் அளித்துள்ளான் என்பதனை உணர்ந்து தலைக்கனம் கொள்ளாது நன்றி மறவாது எல்லோரிடத்தும் அன்பு பாராட்டி வாழ வேண்டும் என்பதனைச் சைவ சமயம் உணர்த்துகின்றது.

நாம் அன்பு வடிவாகி இறை நிலையை அடைவதற்கே பிற உயிரினங்களையும் உயிரற்றப் பொருள்களையும் இறைவன் படைத்துள்ளான் என்ற தெளிவினைச் சைவ சமயம் ஊட்டுகின்றது. புல், பூடு, புழு, மரம், பல விலங்குகள், பறவை, பாம்பு, கல், மாந்தர், பேய், கணங்கள், அசுரர், முனிவர், வானவர், தாவரங்கள் என்று எல்லாமே நாம் இவ்வுலகில் சிறிது காலம் தோன்றி, நின்று, மறைந்து இறைவன் திருவடியைச் சேர இறைவனால் அளிக்கப்பட்டவை என்ற தெளிவினைச் சைவ சமயம் உணர்த்துகின்றது. அதோடு உலகில் வாழும் காலத்தில் இவற்றின் மீது அன்பு பாராட்டி வாழ வேண்டும் எனவும் உணர்த்துகிறது.

இறைவன் கொடுத்திருக்கின்ற இக்குறுகிய வாழ்நாள் காலத்தைச் செம்மையுற சீரும் சிறப்புடனும் வாழ இறைவன் மேலும் மண், நீர், தீ, காற்று, வெயில் என்று ஐம்பூதங்களோடு, கதிரவன், நிலவு, கோள்கள், விண்மீன்கள் என பலவும் படைத்துள்ளான் என்பதனைச் சைவ சமயம் தெளிவுபடுத்துகின்றது. எனவேதான் உயிர்கள் சார்ந்துள்ள உலகினை மாசு படுத்தாது பேண வேண்டிய கடப்பாட்டினையும் சைவ சமயம் கற்பிக்கின்றது. இப்படிப் பல்வேறு வகைகளில் நம்மைப் பக்குவப்படுத்தி, அன்புப் பிழம்பாக்கிச் சான்றோனாக்கி இறைவனோடு கூடி வாழ்கின்ற நிலைக்கு நம்மை உயர்த்துவது சைவ சமயம்.

கடவுள் உண்டு என்ற உண்மையையும் அக்கடவுளின் பேர் அறிவையும் பேர் ஆற்றலையும் பேர் அறிவையும் உலகில் காணக்கூடிய இயற்கை ஒழுங்கு முறையினைக் கொண்டு தெளியலாம். அதுவே பகுத்தறிவு என்கிறார் திருமூலர். பரம்பொருளின் பேர் ஆற்றலை நுணுகி அறிகின்ற நுண் அறிவினால் மாந்தர்க்கே அன்றிப் பரம் பொருளுக்கு எந்த நன்மையும் கிட்டுவதில்லை என்று சைவ நெறி குறிப்பிடுகின்றது. இதனையே மணிவாசகர், ''தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர், அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்றதொன்று என்பால்' என்று குறிப்பிடுவார்.

தன்னை நினையாதவர் உள்ளிருந்தும் அருள்புரிகின்ற பரம்பொருளை அறிந்து வழிபட்டால் அன்புநெறி தழைக்கும் சிவமாம் தன்மை சிறக்கும் என்று தமிழ்ச் சிவ ஆகம ஆசான் திருமூலர் குறிப்பிடுவார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுகின்ற அரிய நெறியினைப் பின்பற்றுவதற்குச் சிவநெறி துணை நிற்பதனால் சிவநெறியினை விட்ட சிறந்த நெறி வேறு இல்லை என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். உண்மையான சிவநெறிக்கு மாறுபட்ட நடைமுறைகளையும் சில தரப்பினரின் தன்நலப் போக்கினையும் கண்டு இறைநெறியை மறுத்தலாகாது என்று திருமூலர் அறிவுறுத்துகின்றார்.

சிவநெறிக்கு மாறுபட்டச் சில அயல் நெறிகள், அயல் மொழிகள், அயல் பண்பாடுகள், அறிவுக்கு எட்டாத கிரியை முறைகள், பாகுபாடுகள் போன்றவை தமிழ்ச் சைவர்களிடையே மூட நம்பிக்கைகளையும் சைவ சமயத்தின்பால் நம்பிக்கை அற்றத் தன்மையையும் ஏற்படுத்தி உள்ளன.

சில சமய ஆசிரியர்கள், குருமார்கள், சைவ சமய ஆசான்கள் என்ற போர்வையில் தமிழ்ச் சைவர் நெறிக்கும் பண்பாட்டிர்கும் மாறான செயல்களைச் செய்வதனைக் கண்டு, அன்னைத் தமிழ்மொழியில், தமிழர் பண்பாட்டில் தமிழர் சிந்தனையில், தமிழர் வழிபாட்டு முறையில் விளங்கும் சிவநெறியினை அயல் வழக்கு என்று புறந்தள்ளும் போக்கு தவறானது.

சைவநெறி என்னும் வயலில் களை மண்டி விட்டது என்பதற்காக வயலைப் புறக்கணிப்பது பொருத்தமற்றச் செயலாகும். ஆதிகாலச் சிவநெறிச் செந்தமிழ்ச் சீலர்கள், சிவநெறியின் கண் மண்டிக்கிடக்கும் களையை எடுப்பதற்குச் சைவ சமயத்தில் ஆழ்ந்த அறிவினைப் பெற்றிருந்தனர். தவற்றைத் துணிந்து தட்டிக் கேட்டனர் அன்பே சிவம் எனும் செந்நெறியை அறியாமையினால்தான் இன்று சீர்மிகு செந்தமிழர் அன்றாட வாழ்வில் மூட நம்பிக்கைகள் மூழ்கிச் சிக்கித் தவிக்கின்றனர். பெருநெறியாகிய சிவநெறியின் மெய்யியலை அறியாமையினால்தான் அதன் நெறி முறைமைக்கு மாறாகச் சைவநெறி உணர்வின்றி வாழ்கின்றனர். நம் இளைய குமுகாயத்தினர் பல்வேறு ஒழுக்கச் சீர்கேடுகளிலும் குற்றச் செயல்களிலும் துணிகரமாக ஈடுபடுகின்றனர். முறையான இறைநெறியும், பண்பாடும், ஒழுக்கமும் இல்லாமையினால் தான் இன்று "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழ்க்கைக் குறிக்கோள் இன்றித் தடம் புரளுகின்றனர்.

அன்பு நெறியான சிவநெறியினை உள்ளத்திலும் உணர்விலும் சிறுவயது முதலே விதைக்காததினால் தான் சிறு துன்பம் ஏற்பட்டாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை தமிழ்ச் சைவர்களிடையே இல்லாது இருக்கின்றது. தற்கொலை, மணவிலக்கு, அடிதடி, மனம் விட்டுப்போதல், தோல்வியைக் கண்டுத் துவண்டுப் போதல் போன்றவை தமிழ்ச் சைவரிடையே மலிந்து காணப்படுகின்றது. சிவத்தை மனத்தினுள்ளே விதைக்காததினால்தான் நெஞ்சில் ஈரமில்லாச் செயல்களையும் பழிபாவத்திற்கு அஞ்சாச் செயல்களையும் நம்மில் பலர் அஞ்சாமல் செய்தலைக் காணவும் கேட்கவும் முடிகின்றது.

சைவம் என்றால் சைவ உணவு உட்கொள்வது என்று பலரும் எண்ணுகின்றனர். புலால் உண்ணாது மரக்கறி வகைகளை உண்ணுவதே சைவம் என்று நினைக்கின்றனர். சைவம் என்பது வாழ்வியல் நெறி. தமிழர்களின் சிந்தையில் உதித்த உயர்வான வாழ்வியல் நெறி. செழுந்தமிழரின் செம்மையான வாழ்வியல் முறைகளை வரையறுக்கும் செந்நெறி. சைவம் சிவத்தோடு தொடர்பு உடையது என்று திருமூலர் குறிப்பிடுவார். அதனாலேயே சைவம் என்னும் செந்நெறி இறைவனால் உயிர்களுக்கு அளிக்கப்பட்ட நெறி என்று கற்றறிந்தோர் கூறுவர்.

சிவம் என்னும் பரம்பொருளே கல்லால் ஆன ஆல மரத்தின் அடியில் ஆசான் வடிவங்கொண்டு, தென்முகக் கடவுளாக ( தட்சிணாமூர்த்தி) இருபத்தெட்டு சிவாகமங்களைக் கயிலையில், சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் எனும் நான்கு முனிவர், சிவயோக மாமுனி, தில்லை மன்றில் தொழுத பாம்புக்கால் முனிவர் (பதஞ்சலி), புலிக்கால் முனிவர் (வியாக்ரமர்), திருமூலர், உமையம்மை, நந்தியெம் பெருமான் போன்றோருக்குப் போதித்தார் என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

சிவம் என்னும் பரம்பொருளிடம் பாடம் கேட்ட சனற்குமாரரின் மாணவரான சத்தியஞானி தரிசிகள் என்பார் தம் மாணவர் பரஞ்சோதி என்பாருக்கு அதைப் போதிக்க, பூவுலகில் மெய்கண்டார் என்பாருக்கு அதனைப் பரஞ்சோதியார் சேர்ப்பித்தார்.

கயிலாயத்தில் இருந்து ஆசான் முகமாக வந்த இச்செந்நெறி, பதினான்கு மெய்கண்ட நூல்களாக, சித்தாந்த சைவமாக, மெய்கண்டார், அருணந்தி சிவம், மனவாசகம் கடந்தார், உமாபதி சிவம், திருவியலூர் உய்ய வந்த தேவர், திருக்கடவூர் உய்ய வந்த தேவர் என்போரால் நம்மிடையே சேர்க்கப்பட்டன. இந்நெறியே சித்தாந்த மெய்கண்ட நூல்களான சிவஞான போதம், சிவஞானசித்தியார், இருபா இருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் என்றாயின.

திருக்கயிலாயத்தில் தென்முகக் கடவுளாய்த் தோன்றி ஆசான் வடிவில் இருந்த பரம்பொருளிடம் பாடம் கேட்டத் திருமூலர், அச்செந்நெறியினை ஒன்பது தந்திரங்களாக, மூவாயிரம் பாடல்களில் திருமந்திரம் எனும் தீந்தமிழில் அருளினார். அருந்தமிழர்களின் மரபு வழி தமிழ்ச் சைவம் என்னும் செந்நெறியை இறைவனே தென்முகக் கடவுளாய்த் தோன்றி ஆசான் வடிவில் கற்பித்த சிறப்பினை உடையது.

சிவபெருமான், சீர்காழியில் மூன்று வயது குழந்தையான திருஞானசம்பந்தரைத் தெரிவு செய்து, சிவஞானப்பாலை ஊட்டி, சித்தாந்தச் செந்நெறியை நமக்கு அளித்தார். திருவாமூரில், எழுபத்து ஒன்பது வயது திருநாவுக்கரசரைத் தெரிவு செய்து அவருக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொண்டு நமக்குச் செம்மை மிகு சித்தாந்த நெறியை அளித்தார். திருநாவலூரில் திருமணத்தின்போது ஆவண ஓலை காட்டிச் சுந்தரர் என்பாரைப் பதினாறு வயதில் ஆட்கொண்டு சித்தாந்தச் செந்நெறியை நமக்கு அருளினார்.

திருவாதவூரில் தோன்றி பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்து குதிரை வாங்கச் சென்ற மாணிக்கவாசகரைச் சிவஞானபோதம் என்ற நூலைக் கொண்டு தன் திருத்தாளினைக் காட்டி ஆட்கொண்டு நமக்குச் சைவம் என்னும் செந்நெறியை நல்கினார் பெருமான். திருமுறைகள் எனும் தமிழ்ச் சைவ நெறியை அருளிய இருபத்தேழு ஆசிரியர்களையும் சிவம் என்னும் பரம்பொருளே நேரில் தோன்றி ஆட்கொண்டு சைவம் என்னும் செந்நெறியினைப் புகட்டியுள்ளது. இதனாலேயே, ‘‘திருமுறையே சைவநெறிக் கருவூலம், தென்தமிழின் தேன்பா காகும், திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம், திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம், திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்‘‘ என்று தனிப்பாடல் ஒன்று குறிப்பிடும். இதன் வழி தமிழ்ச் சைவம் சிவத்தையே பரம்பொருளாக, செம்பொருளாகக் கொண்டுள்ளது என்பது தெளிவாகும்.

சைவம் என்னும் செந்நெறி எல்லாக் காலத்தும் இறைவனால் நமக்கு அளிக்கப்பட்டது என்றும், தமிழர்கள் சிந்தனையில் இறைவனால் சேர்க்கப்பட்டது என்றும், இறைவன் உள்ளிருந்து உணர்த்தியது என்றும், நம் அன்னைத் தமிழில் மிளிர்வது என்றும் அது சிவத்தோடு தொடர்பு உடையது என்று அறியலாம். தமிழ்ஞான சம்பந்தர் சிவ அறிவுப்பால் உண்டு அருளிய முதல் பதிகமான ‘‘ தோடுடைய செவியன்‘‘ எனும் பதிகத்திலேயே சைவம் என்னும் செந்நெறியைச் செழுந்தமிழர் வாழ்வியல் நெறியை அருநெறி, பெருநெறி ஒருநெறி, திருநெறி, தமிழ் நெறி என்று குறிப்பிடுகின்றார்.

சைவம் என்னும் செந்நெறி அருநெறி என்றார். சைவநெறி மரபில் தோன்றுவதே அரிது என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். சிவத்தோடு தொடர்புடைய இந்நெறியினைத் தங்கள் வாழ்வியல் முறைமையாகக் கொண்டு வாழும் தமிழ் இனத்திலும் சைவ குடும்பத்திலும் பிறந்தல் கிடைத்தற்கு அரிது என்றார். நாளும் தமிழைப் பேசி, தமிழால் இறைவனைப் பாடி, தமிழால் இறைவனை வழிபடுகின்ற இச்சைவ மரபில் தோன்றுவதற்குப் பல பிறவிகளில் படிம நிலையில் பயின்று வந்திருக்க வேண்டும் என்கிறார். அதனாலேயே இன்னொரு பாடலில், “முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை.... பண்ணி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே” என்று தமிழாகரர் திருஞானசம்பந்தர் குறிப்பிடுவார். எனவேதான் இந்த அருமையான செந்நெறியை அருநெறி என்றார்.

சைவம் என்னும் செந்நெறியைப் பெருநெறி என்றும் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். சைவம் என்னும் செந்நெறி ஒரு குறுகிய வட்டத்துக்குள் இல்லாமல் உலகிலுள்ள எல்லா நெறிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் எல்லா நெறிகளுக்கும் தன்னுள்ளே இடமளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது என்கிறார். எனவேதான் சைவர்கள் வாழ்த்தொலி கூறுகின்ற போது, “தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்கிறோம். சைவம் என்னும் செந்நெறி கூறும் இறைவனே எல்லோரும் பல்வேறு நெறிகளிலே இருந்து கூறுகின்ற இறைவன் என்கிறார்.

சைவம் குறிப்பிடும் சிவமே எல்லா நெறிகளிலும் வெவ்வேறு பெயர்களுடனும் வடிவங்களுடனும் நின்று அருளுகின்றது என்பதனை, “ வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின், விளங்குபரம் பொருளே! நின் விளையாட்டு அல்லான் மாறுபடு கருத்தில்லை” என்று தாயுமானவ அடிகள் குறிப்பிடுவார். மேலும், “ ஆறு சமயங்கள்தொறும் வேறுவேறாகி விளையாடும் உனை யார் அறிவார்? ” என்று குறிப்பிடுகின்றார். பெருநெறி என்றதனால் சிறுநெறிகள் கூறும் சிறுதெய்வ வழிபாடுகளையும் மறுக்கிறது சைவம் என்னும் செந்நெறி என்றாகிறது. “ சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம், சிவ பெருமான் சேவடியே சிந்திக்கப் பெற்றோம்” என்று திருநாவுக்கரசு அடிகள் இதனைச் சுட்டுவார். “பெரு நெறி பிடித்து ஒழுக வேண்டும்” என்று இதனையே அருட்பெரும் சோதி வள்ளல் பிரானும் வேண்டுவார்.

சைவம் என்னும் செந்நெறியை ஒருநெறி என்று தமிழ்வல்ல திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். சைவம் என்னும் செந்நெறி ஒரு கடவுள் வழிபாட்டு நெறியினை உடையது என்கின்றார். சைவர்களுக்குக் கடவுள் ஒன்றே! அக்கடவுளைப் பல்வேறு பெயர்களிலும் வடிவங்களிலும் வழிபடுகின்றோம் என்கின்றார். இதனைப், “பேர் ஆயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை” என்று திருநாவுக்கரசு அடிகள் குறிப்பிடுவார். “ ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்” என்று திருமூலர் கூறுவார். “ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட” என்று தெய்வச் சேக்கிழார் கூறுவார். எனவே சைவம் ஒரு கடவுள் கொள்கையை உடைய செந்நெறி.

சைவம் என்னும் செந்நெறி, திருநெறிய தமிழ்நெறி என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். தமிழிலேயே ஆகிய செந்நெறியாகிய சைவ நெறி இறைவன் காட்டிய நெறி, இறைவன் ஆக்கி நமக்களித்த நெறி, பரம்பொருளின் திருவடிப் பேற்றினை அளிக்கும் நெறி என்கின்றார். இறைவனைத் தமிழால் பாடியே இருபத்தேழு திருமுறை ஆசான்களும் இறைவனடி சேர்ந்திருக்கின்றனர். இறைவனைத் தமிழில் பாடியே அடைய முடியும் என்று வாழ்ந்து காட்டியவர்கள் நம் திருமுறை ஆசான்கள். திருநெறிய தமிழ்நெறியாகிய சைவ நெறி தொல்வினையை எளிதில் தீர்க்கும் என்று உறுதி வைத்துப் பாடியிருக்கின்றார்கள்.

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐந்திணை ஒழுக்கக் காலமான சங்க காலத்தில் சிவ வழிபாடு சிறப்புற்று இருந்தமையைத் தெய்வச் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் குறிப்பிடுகின்றார். பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றில், தமிழர் மேற்கொண்டு ஒழுகிய ஐவகை நில வாழ்வியல் முறைமையினைப் பற்றிக் குறிப்பிடுகையில், ஐந்திணை நிலத்திலும் இடம்பெற்றிருந்த திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி, திருமுல்லைவாயில், திருப்பாசூர், திருவொற்றியூர் போன்ற மிகப் பழமையான சிவபெருமான் திருக்கோயில்களைக் குறிப்பிடுகின்றார்.

சீர்மிகு செந்தமிழர் பண்டை காலம் தொட்டு சிவ வழிபாட்டைப் பின்பற்றி வந்துள்ளனர் என்பதைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பறைசாற்றி நிற்கின்றன. திருமுறை ஆசிரியர்களால் பாடப் பெற்றத் திருக்கோயில்கள் இருநூற்று எழுபத்து ஆறும் தெளிவான ஓர் உண்மையை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. முதன்மையான பழங்காலத்துக் கோயில்கள் சிவன் கோயில்களாகவே அமைந்துள்ளன. இத்திருக் கோயில்களின் கருவறையில் சீர்மிகு செந்தழர் சைவநெறி வழுவாமல் சிவக்கொழுந்து எனப்படும் சிவலிங்கத் திருமேனியையே அமைத்துள்ளனர்.

நாயன்மார்களால் பாடப்பெற்றதும் திருத்தொண்டுகள் செய்யப் பெற்றதுமான இத்திருக்கோயில்கள் அனைத்தும் சிவலிங்கத் திருமேனியை மூல மூர்த்தியாகக் கொண்டவைகளே! சிறப்பு நாட்களில் பூசனை செய்வதற்கும் ஊர்வலம் கொண்டு வருவதற்கும் உறுதியாய் ஆடல் அரசுத் திருமேனியைச் சிவாகமங்களில் குறிப்பிட்டிருப்பது போன்று அமைத்துள்ளனர். திருக்கோயில் வருமானத்திற்காகவோ அல்லது பிற காரணங்களுக்காகவோ சிவலிங்கத் திருமேனியைத் துணைத் திருமேனியாக (பரிவார மூர்த்தம்) அமைப்பது இல்லை என்று என்ற கொள்கையில் உறுதியாக இருந்திருக்கின்றனர். திணைத் தெய்வங்களான முருகனையும் திருமாலையும் அம்மையையும் சிவபெருமானின் இதர அருள் திருமேனிகளாகச் சீர்மிகு செந்தமிழர் ஏற்றுக் கொண்ட பின் அத்திருமேனிகளைச் சிவன் கோயில்களில் துணைத்திருமேனிகளாக அமைத்து வழிபட்டனர்.

தமிழர் தம் வரலாற்றினையும் பண்பாட்டினையும் கூறும் சான்றோர், தமிழர் தம் வாழ்வில் இயற்கை வழிபாட்டினையும் நடுகல் வழிபாட்டினையும் குலதெய்வ வழிபாட்டினையும் காவல் தெய்வ வழிபாட்டினையும் நாட்டுப்புற வழிபாடாக, மரபு வழிபாடாக மேற்கொண்டு வந்துள்ளனர் என்று குறிப்பிடுகின்றனர். தாங்கள் செய்கின்ற தொழில் பற்றிக் குலதெய்வ வழிபாடும் தங்கள் ஊரில் வாழ்ந்து நற்செயல்கள் செய்து மறைந்த பெரியவர் அல்லது வீரரின் பாதுகாப்புத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று காவல் தெய்வ வழிபாடு செய்தனர் என்கின்றனர்.

காட்டை அடிப்படையாகக் கொண்டு தொழில் புரிந்தவர்கள் காட்டேறி, நீலி, பிடாரிபோன்ற பேய்களைப் பயத்தினால் வழிபட்டனர் என்கின்றனர். ஆனால் இத்தகைய சிறுதெய்வங்களின் கோயில்களை அவர்கள் ஊர் மத்தியில் அமைப்பதில்லை! ஊர் எல்லை, கிராமத்து எல்லை, வயலின் ஒதுக்குப் புறத்திலுள்ள இடங்கள், காட்டோரங்கள் போன்ற இடத்திலேயே அமைத்து வழிபட்டு வந்துள்ளனர். புலப்பெயர்ந்த தமிழர் தோட்டப்புறத்திற்குக் கூலியாட்களாக வந்த இடங்களில் தாங்கள் வாழ்ந்த தோட்டப் புறங்களில் அமைத்த நாட்டுப்புற தெய்வங்களின் கோயில்களே இன்று தோட்டங்களெல்லாம் நகரப் புறங்களாக மாறிய பின்பும் தமிழர்களின் முழுமுதற் கடவுளான சிவன்பெருமானின் கோயில்களைப் போன்று நகர்ப்புறங்களில் நிற்கின்றன.

எல்லா சூழலிலும் எவ்விடத்தும் எவர்க்கும் எக்காலத்தும் நின்று அருள் புரியும் பரம்பொருள் வழிபாட்டிற்குச் சைவர்கள் மீள வேண்டும். அமைதியான, முறையான, மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய உயரிய வழிபாட்டுச் செந்நெறியைத் தமிழ்ச் சைவர்கள் மீட்டெடுப்புச் செய்ய வேண்டும். தமிழ்ச் சைவர்கள் தங்களின் உயரிய செந்நெறியை ஆழ்ந்து கற்பதற்கு முனைய வேண்டும். திருவருள் துணை நிற்பதாகுக!



தமிழே இறைமொழி



# மறுமலர்ச்சி காணும் தமிழ்ச்சமயம்

**முனைவர் இளஞ்சோதி தேவராசு**
பெட்டாலிங் பெர்டானா,
மாவட்டக்கல்வி அலுவலகம்,
சா ஆலாம், மலேசியா.
*elenchothy@moe.gov.my*

ஆய்வுச்சுருக்கம்

*தமிழ்ச்சமய ஆய்வு, கருத்தரங்கம் மற்றும் மாநாடு என சமீபகாலமாக ஆங்காங்கே நிகழ்ந்து வருவது அனைவரும் அறிந்ததே. இச்சமயம் சர்ச்சைக்குள்ளாகி பலரும் இதை விவாதித்து வருகின்றனர்; இன்னும் சிலர் பரிகசிக்கவும் செய்கின்றனர். அப்படி ஒரு சமயம் உண்மையில் உள்ளதா அல்லது புதிதாக தோற்றம் கண்டுள்ளதா? அதனைக் குறித்தே இவ்வாய்வுக்கட்டுரை. இவ்வாய்வில் தமிழ்ச்சமயத்தின் வரலாறு, வழிபாடுகள், தமிழ்ச்சமயத் தோற்றத்தின் அவசியம், இறையியல் தத்துவம், சிந்தனைகள், கட்டமைப்பு கூறுகள் ஆகியவை அலசி ஆராயப்பட்டுள்ளன. தமிழன், சமயத்தைத் தனிக்கூறாக பாராமல் வாழ்வியலாகவே கொண்டிருக்கிறான் என்பதைக் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. மனிதனைப் பண்படுத்தி இம்மை கடந்து மேன்மிக்க மறுமையடைய வழி நடத்தும் வலிமைகொண்டது இச்சமயம் என்ற தெளிவையும் தருகிறது. இவ்வாய்வு வரலாறு, மனிதர்களின் பண்புகள்- சிந்தனைகளோடும் இயற்கைச் சூழலோடும் தொடர்புடைய தத்துவம் என்பதால் வரலாற்றியல் மற்றும் பகுப்பியல் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுரை மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் மூன்று வருடப் பயிற்சிப்பட்டறைப் பதிவுகள், மாநாட்டுக்கட்டுரைகள், உரைகள் மூலம் கொணரப்பட்ட தரவுகளைக் கொண்டு எழுதப்பட்டது. இஃது ஓர் ஆரம்பக்கட்ட முயற்சியே ஆகும். இவ்வாய்வு தமிழ்ச்சமயம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய பாரம்பரிய வாழ்வியல் முறை என்பதை உறுதிபடுத்தியுள்ளது. சங்ககால தமிழர்கள் இறைவன் அனைத்து உயிர்களிலும் வாழ்கின்றான் என நம்பினர். எனவே, வாழும் உயிர்களுக்கெல்லாம் பசிப்பிணி ஆற்றுதலே கடவுளுக்குத் தரும் உண்மையான காணிக்கை என்று உணர்ந்து பக்குவப்பட்டவர்களைக் கொண்ட நற்சமுதாயமாய் தமிழர் வாழ்ந்தனர். மரபு சார்ந்து, சமயம் சார்ந்து மற்றும் அகம் சார்ந்து இறையை வழிபாடு செய்த தமிழர்களை மீண்டும் அறவழிக்குத்திரும்ப தமிழ்ச்சமயம் மூன்று கூறுகளை வரையறுத்துள்ளது. தமிழ்ச்சமயம் ஆதிசமயம் என்ற உண்மைக்கு வலு சேர்ப்பதை ஆய்வின் தரவுகள் காட்டுகின்றன.*

*கருச்சொற்கள்: தமிழ்ச்சமயம், வாழ்வியல், மெய்யியல், அறவழி*

## *1.0 முன்னுரை*

*வனாந்திரத்தில் மிருகமாய் திரிந்த மனிதன் பரிணாமம் கண்டு, 50,000 வருடங்களுக்கு முன்பே கடவுளை வணங்க ஆரம்பித்து விட்டான் (Narr & Karl, 2015) ஆதியில் பூமியின் வெவ்வேறு பகுதிகளில் தோன்றிய மனிதக்கூட்டங்கள் அதன் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு இயற்கையைப் போற்றி வழிபட்டனர். காலப்போக்கில் படிப்படியாக இது மரபு வழிபாடாகியது. அப்போது சமயம் உருவாகவில்லை. மனித நாகரீகத்தின் உச்சமே சமயம். சமயம் என்பதன் பொருள் சமை-சமைதல், அஃதாவது பக்குவப்படுதல் என்பதாகும் (திருச்செல்வம், 2021, ப27). எனவே சமயம் என்பது மனிதனைப் பக்குவப்படுத்தி அவன் ஆன்மா இறைநிலை அடையும் நெறி. இந்நிலையை அடைவதற்கான வழியினை வாழ்ந்து காட்டினர் பலர். இவர்கள் யோகிகள், ஞானிகள், மகான்கள் கடவுள் தூதர்கள், மற்றும் சமயத்தலைவர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களைப் பின்பற்றி வாழ்ந்த மக்கள் காலப்போக்கில் "அனைவரும் ஒன்றே" என்ற உண்மையை மறுத்து மற்றவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக்காட்ட சமயத்தைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். தாம் பின்பற்றிய வழிப்பாட்டின் மேல், சமயத்தலைவர்கள் மேல்கொண்ட அதீத நம்பிக்கையை அடுத்தவரிடம் திணிக்க முற்பட்டபோது அது மதமாகியது. நாளடைவில் மதம் என்ற விடயம் உலக சர்ச்சைக்கான காரணிகளில் ஒன்றாக மாறி பலகோடி உயிர் பலிகளுக்கு வித்திட்டது (அன்பழகன், உ௦௦கூ, ப க அ). இதற்குச் சான்று வரலாறு பகரும்.*

### *1.1 தமிழருக்கென ஒரு சமயம்*

*உலகத்தின் மூத்த மொழி தமிழ்; உலகத்தின் மூத்த மாந்தன் தமிழன்; உலகில் வல்லரசை நிறுவி பெரும் நிலப்பரப்பை ஆண்டவன் தமிழன்; இமயம் முதல் குமரி வரை, கங்கை தொடக்கம் கடாரம் வரை, எட்டுத் திக்கிலும் வெற்றிக்கொடியை நாட்டியவன் தமிழன் (பாபு சகாதேவன், உ௦கஅ பருகூ). இது வரலாறு. இப்படி நாகரீகத்தின் உச்சம் கண்ட தமிழர்கள் வழிபாடுகளில் கொஞ்சங்கொஞ்சமாக வேற்றுமொழி இடம் பெற்று வேரூன்றி விட்டது; தமிழ் பயில வேண்டிய ஆலயங்களில் தமிழ் மறக்கப்பட்டு, மறுக்கப்பட்டது ( குன்றக்குடி அடிகளார், ககூசூ ந. ப4 ). தமிழரின் சமயம் இந்துசமயம் என அடையாளப்படுத்தப்பட்டுவிட்டது. இந்நிலைக்குக் காரணம் ஆரியர் மற்றும் ஆங்கிலேயர் என்றால் மிகையாகாது (கந்தையா பிள்ளை, ககூசூ௦, . ப25). அயலார் அரசியல் சூழ்ச்சியில் சிக்குண்ட தமிழர் இழந்தது சுதந்திரம் மட்டுமல்ல, மாறாக அவர்களின் மொழி, இறைநம்பிக்கை, வழிப்பாடுகள் மற்றும் சமயமுமாகும்.*

*தமிழரின் சமயத்தையும் இறைகோட்பாடுகளையும் மீட்பதற்கு சான்றோர்கள் செய்த முயற்சியில் குறிப்பிடத்தக்க ஒன்றுதான் 1940 ஆம் ஆண்டு மறைமலை அடிகளார் தலைமையில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்த தமிழர்ச்சமய மாநாடு (திருச்செல்வம், 2021, ப93). ஆனால் இந்த மாநாடு எதிர்ப்பை எதிர்நோக்கியது. சொந்த இனமே அதை மறுத்ததுதான் அதன் ஆச்சரியம். வருடங்கள் கழித்து மறுமலர்ச்சி காண தமிழ்ச்சமயம் அக்னிப்பறவையாய் மீண்டெழுந்து வந்துள்ளது. தமிழ்ச்சமயம் என்பது தூயத்தமிழ் மரபுகளில் உள்ள வாழ்க்கை நெறியை மட்டுமே குறிக்கும் (திருச்செல்வம், 2021, ப73) . இதன் தாத்பரியம் உணராத தமிழர் பலர் "இதுவென்ன புதுச்சமயம்?" என வெகுண்டெழுகின்றனர்; இன்னும் சிலரோ வியக்கின்றனர். நம் முன்னோர்கள் விதைத்த சமயத்தை மீட்க வேண்டிய தேவையில் மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை உருவாகி செயல்பட்டு வருகிறது. இதைக் குறித்தே இவ்வாய்வுக்கட்டுரை.*

ஆய்வு நோக்கம்

இவ்வாய்வின் பொது நோக்கம், தமிழ்ச்சமயத்தின் மறுமலர்ச்சி பற்றி அறிவதாகும். இதற்குத் தமிழர் அனுசரித்த இறையியல் கொள்கை, வழிப்பாடுகள் அதன் பின்னணியிலுள்ள விழுமியம்-சமய நம்பிக்கைள் பற்றி அறிதல் அவசியம். இந்நோக்கம் அடைய கீழ்க்கண்ட ஆய்வு வினாக்கள் பயன்படுத்தபட்டுள்ளன;

i. தமிழ்ச்சமயத்தின் வரலாறு யாது?
ii. தமிழ்ச்சமய மறுமலர்ச்சியின் அவசியம் யாது?
iii. தமிழ்ச்சமயத்தின் இறையியல் தத்துவம் என்ன?
iv. தமிழ்ச்சமயத்தின் சிந்தனைகள் யாவை?
v. தமிழ்ச்சமயத்தின் கட்டமைப்புக்கூறுகள் யாவை?

1.0 ஆய்வு முன்னோடிகள்

இக்கட்டுரை மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் மூன்று வருடப் பயிற்சிப்பட்டறைப் பதிவுகள், மாநாட்டுக்கட்டுரைகள், உரைகள் மூலம் கொணரப்பட்ட தரவுகளைக் கொண்டு எழுதப்பட்டது. மேலும் தமிழ்ச்சமயத்தின் வரலாற்று சான்றுகளைத் பெற, இவ்வாய்வு இடைச் சங்ககால இலக்கண நூல்களான தொல்காப்பியம் (புறத்திணையியல்: பொருளதிகாரம் (23 மற்றும் 81), சிலப்பதிகாரம் (இரண்டாவது மதுரைக்காண்டம்: வேட்டுவவரி 13-17), புறநானூறு (335), சேக்கிழார், சம்பந்தர் மற்றும் திருமூலர் அருளிய திருமுறைபாக்கள் ஆகிய தரவுகளைப் பயன்படுத்தியுள்ளது.

2.0 ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு விளக்க ஆராய்ச்சி வகையைச் சார்ந்தது. இது மனிதர்களின் சிந்தனைகளோடும் இயற்கைச் சூழலோடும் தொடர்புடைய தத்துவம் என்பதால், இக்கட்டுரை வரலாற்றியல் மற்றும் பகுப்பியல் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (தி. சு. நடராசன், 2006).

3.0 ஆய்வு முடிவுகள்

3.1 தமிழ்ச்சமயத்தின் வரலாறு

சுமார் 5,000 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டவர்கள் தமிழர்கள் (சீனிவாச அய்யங்கார், 1989, ப3). அதுகாறும், தமிழ்ச்சமயத்தின் வரலாறு அவ்வாறேயாகும். தமிழ்ப்பெருமக்கள்கண்ட சமய வாழ்க்கை “பிறர் நலம்பேணுகின்ற பேரறம்” (குன்றக்குடி அடிகளார், 1963. ப13). அப்படியாயின், தமிழருக்கென்று தனித்த சமய நெறிகள், வழிபாட்டு முறைகள் இருந்திருக்கின்றன எனத் தெளிவாகிறது (தேவநேயப் பாவாணர், 2000; ப6-10). அகத்தியர், ஔவை 63 நாயன்மார்கள் 18 சித்தர்கள் 12 ஆழ்வார்கள் உட்பட திருமூலர், பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர், வள்ளலார் வரையிலான நமது அருளாளர்கள் அனைவரும் அறம் சார்ந்த பெருநெறியை மட்டுமே செய்யுட்கள் வழி வலியுறுத்தினர்.

### *5.1.1 தொல்காப்பிய கால தெய்வங்கள்*

*2500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தொல்காப்பியத்தில் சமயம் அல்லது மதம் என்ற சொல் இல்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆனால் கடவுள் மற்றும் இமையவர்கள் என்ற சொல் பயன்பாடு தேவர்களைக் குறிக்கவே கையாளப்பட்டுள்ளது (ராணி, பொ. 2018. ப 95; பா.பிரபு, 2014,http://nakkeran.com).*

#### *5.1.1.1 ஞாயிறு, திங்கள், தீ(ஒளி)*

*ஆரம்பக்காலத்தில் தமிழ் மக்கள் ஞாயிறு, திங்கள், தீ மூன்று ஒளி வடிவத்தை வணங்கியுள்ளனர் (தொல்காப்பியம்: பொருளதிகாரம்: புறத்திணையியல் 27). கீழேயுள்ள பாடல் இதற்கு சான்று:"கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற*
*வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*
*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."*
*-புறத்திணையியல் (27)*

*இதன் பொருள் ஞாயிறு, திங்கள், தீ மூன்றையும் வாழ்த்துவதும் அமரர் வாழ்த்துபட போலவே வரும் என்பதாகும். அடுத்ததாக இறையியல் கொள்கையைக் காட்டும் கடவுள் என்ற சொல்லை புறத்திணையியல், 23-வது வரியில் காணலாம்.*
*"காமப் பகுதி கடவுளும் வரையார்*
*ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"*
*-புறத்திணையியல் (81)*

*மேற்கண்ட வரிகள் தமிழர்கள் கடவுள் கொள்கையுடையவர்கள், இறை வழிபாட்டை நோற்றனர் என அறிய வருகின்றது. இதன் பொருள் இன்பப் பகுதிகளைக் கடவுளிடமிருந்தும் நீக்கமாட்டார்கள். மக்களிடமிருந்தும் நீக்க மாட்டார்கள் என்று புலவர் கூறுவர் என்பதாகும். ஆதிகாலத்தில் இயற்கையை தங்கள் கடவுளாக வணங்கி வந்த தமிழர்கள் பின், தாங்கள் வாழ்ந்த நில (ஐந்திணை) பின்னணிக்கேற்றவாறு தங்களைக் காத்த மக்களையே வழிபடத் தொடங்கினர் (தேவநேயப்பாவாணர், 2000; ப6-10).*

#### *5.1.1.2 ஐந்திணை தெய்வங்கள்*

*கி.மு.500-300 ஆண்டுகளில் தமிழ் மக்களின் வாழ்வியல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நிலம் சார்ந்து வேறுப்பட்டிருந்தது (இர. திருச்செல்வம், 2021, ப32). குறிஞ்சி (மலை) நில மக்கள் வேட்டையாடியும், முல்லை (காடு) நில மக்கள் ஆனிரை மேய்த்தும், மருத (ஆற்றுப்படுகை) நில மக்கள் பயிர் செய்தும், நெய்தல் (கடல்) நில மக்கள் மீன் பிடித்தும், பாலை ( வறண்ட) நில மக்கள் ஆநிரை கவர்ந்து வாழ்ந்த சமுதாயத்தைத் தொல்காப்பியத்தில் காண முடிகிறது. அதற்கு ஏற்றவாறே சேயோன் (முருகன்), மாயோன் (திருமால்), வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்கள் வழிபாடு செய்யப்பட்டுள்ளனர்.*

*(தேவநேயப்பாவாணர், 2000; ப6-9). குறிஞ்சி நில மக்களின் பணி வேட்டையாடுதலும் தேன் சேகரிப்பும் ஆகும். இந்நில மக்களின் தலைவன் முருகன். ஆரம்பத்தில் உருவமில்லாத மலை கடவுளாக இருந்த முருகனை ஆவியாக, சக்தியாகவே வழிபட்டார்கள். பின் மரத்திலும் கல்லிலும் மனித வடிவத்திலும் வழிபட்டார்கள். முல்லை நில மக்கள் ஆநிரை வளர்த்து மேய்த்து பால் சம்பந்தமான பொருட்களுடன் வாழ்ந்ததால் அந்நில மக்களின் காப்பான் மாயோனைக் கொண்டாடினர். கால்நடை நிறைய பால் தர திருமாலை வழிபட்டுள்ளனர். வயலும் வயல் சார்ந்தது மருதநில மக்களின் தொழில் வேளாண்மை. இவர்களின் இறைவன் இந்திரன்.*

பொன் இடியை ஆயுதமாகவும் ஐராவதம் என்னும் வெள்ளை யானையை வாகனமாகக் கொண்ட இந்திரனை போருக்குச் செல்லும் முன்னர் மருத நிலமக்கள் வணங்கினர். நெய்தல் நிலத்து மக்களான சேர்ப்பன், நுளைச்சி, நுளையர், பரதவர், பரத்தியர் ஆகியோர் மழை, ஆறு, கடல் என்று நீர் நிலைகளுடன் தொடர்புடைய நீர்க்கடவுளான வருணனை ( ஆகாயத்தை) முத்துக்களையும், வலம்புரிச் சங்குகளையும் காணிக்கையாகச் செலுத்தி, வழிபட்டனர். சிலப்பதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள இந்திரவிழாவும் மாதவி, வருணனை வழிபடும் காட்சியும் இதற்குச் சான்று. பருவகாலத்தில், மழை பெய்யாமல், வறட்சியிலுள்ள பாலை நிலத்தில் வாழ்ந்தவர்கள் எயினர். இவர்கள் ஆநிரை கவர்தல் போரில் வெற்றி தர அவரை, துவரை, எள்ளுருண்டை, இறைச்சி முதலியன படைத்து கொற்றவையை வழிபட்டனர். சான்றுகளை சிலப்பதிகாரத்தில், இரண்டாவது மதுரைக்காண்டத்தில், கீழ்க்கண்ட வரிகளில் காணலாம்.

"புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரை
கருதிப் போகுங் காலைக்
கொள்ளும் கொடியெடுத்துக் கொற்றவையும்
கொடுமரமுன் செல்லும் போலும்" -வேட்டுவவரி, (வரி13)

"கலையமர் செல்வி கடனுணின் அல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்" - வேட்டுவவரி, (வரி 16-17)

சுருங்கக்கூறின் தமிழர் மரபில் ஐந்திணை வாழ்வியல், வழிபாடு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. வெவ்வேறு திணை மக்களும் தாங்கள் வழிபட்ட தெய்வங்களுக்கு குறிப்பிட்ட மாதங்களில் விழாக்கள் கொண்டாடியுள்ளனர். கீழ்க்கண்ட பட்டியல் 1 ஐந்திணை தெய்வங்களைப் போற்றும் விழாக்களையும் கொண்டாடப்படும் மாதங்களையும் காட்டுகிறது.

பட்டியல் 1: ஐந்திணை தெய்வங்களைப் போற்றும் விழாக்கள்

| ஐந்திணைகள் | தெய்வங்கள் | மாதங்கள் | விழாக்கள் |
|---|---|---|---|
| குறிஞ்சி | முருகன் | கார்த்திகை | திருக்கார்த்திகை |
| ,உல்லை | மாயோன் | மார்கழி | மார்கழி பூசை |
| மருதம் | இந்திரன் | சித்திரை/ ஆவணி | திருவோணம்/ இந்திர விழா |
| நெய்தல் | வருணன் | மாசி | மாசி மகம் |
| பாலை | கொற்றவை | புரட்டாசி | புரட்டாசித் திருவோணம். |

5.1.1.3 இயற்கை நடுகல் வணக்கம்

மேற்கண்ட ஐந்திணை தெய்வங்கள் தவிர்த்து சங்க கால தமிழ் மக்களிடையே வேரூன்றி இருந்த வழிபாடு நடுகல் வணக்கமாகும். இந்தப்பண்பாடு அதிகமாக கி. பி. பதினோராம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. போரில் துணிவு காட்டி வீரச் சாவு அடைந்த போர் வீரனின் நினைவாக நடுகல்கள் எழுப்பப்பட்டன.

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே." -புறநானூறு (335)

மறக்குடி பிறந்த மக்கள், விழுப்புண்பட்டு வீழ்ந்த வீரனது பெயரும் பீடும் பெருமையும் வலிமையையும்] எழுதி நட்ட கல்லைக் கடவுளாகக் கருதி வழிபடுதலன்றி நெல் சொரிந்து வழிபடும் தெய்வங்கள் வேறு இல்லை என்பதே இதன் பொருள். நடுகற்களை ஊன்றியும் பின்னர் அவர்களைச் சிலையாக வடித்தும் வணங்கி வந்தனர். இந்நன்றி நவிலும் வழிபாடே பிறகு குலதெய்வ வழிபாடாகியது.

5.1.1.4 சிறு தெய்வ - காவல் தெய்வ வழிபாடு (தமிழ்ச்சமயத்தில் இவை நாட்டார் வழிப்பாடு என இன்று அழைக்கபடுகிறது)

சிறு தெய்வ அல்லது காவல் தெய்வ வழிபாடும் தமிழ் மக்களிடையே கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக சாந்தமான தெய்வமாக மாரி அம்மனையும் போர் தெய்வமாக ஐயனார் அல்லது கருப்பசாமியையும் காண்கிறோம். பொதுவாக, கருப்பசாமி நீதிக்கான தெய்வமாகவும் ஐயனாரை தமது கிராமத்தின் பாதுகாப்பு தெய்வமாகவும் வழிபட்டார்கள். சங்க இலக்கியத்தில்- அகம் 345, 370, குறுந்தொகை 218, கலித்தொகை 89 போன்ற பல பாடல்களில் இதைக் காணலாம்.

5.1.1.5 சிவன்

தென்னகத்தே எழுந்த இன்னொரு மலைத்தெய்வம் சிவன். சிவனைக் குறிக்கும் சொல் 1 6 1 0 தொல்காப்பிய நூற்பாக்களில் இல்லாதபோதிலும் கடைச்சங்க இலக்கியங்களில் தலைமையான கடவுளாக. காணலாம் (இரா. சீதா லட்சுமி, 2019; ப75). 1300 ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கவாசகர் “ தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டினருக்கும் இறைவா போற்றி” என்று பாடினார். பிற்காலத்தில் சிவன் உலகமெல்லாம் பரவியது. புறநானூற்றின் ஒரு பாடலின் மூலம் சிவனுக்கும் சங்ககாலத்தில் கோவில் இருந்ததை அறிய முடிகிறது.

“பணியிய ரத்தைநின் குடையே முனிவர் முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே” – புறநானூறு.

இதில் வரும் முக்கட் செல்வர் எனும் சொல் இங்குச்சிவனைக் குறிக்கிறது.

5.2 தமிழ்ச்சமய மறுமலர்ச்சியின் அவசியம்

தமிழர் இறையியலை மூன்றாக பகுக்கலாம். அவை: மரபு சார் வழிபாடு, சமயம் சார் வழிபாடு மற்றும் அகம் சார் வழிபாடு ஆகும். மேற்குறிப்பிட்டவையாவும் தமிழரின் மரபு சார் வழிபாடாகும். இறைவழிபாடு தமிழ்மொழியிலே நிகழ்த்தப்பட்டதும் தமிழருக்கான நான்மறை தமிழிலே இருந்ததற்கும் சான்றுகள் ஏராளமாய் உள்ளன. சான்றுகளுக்காக சேக்கிழார், சம்பந்தர் திருமூலர் அருளிய சில திருமுறைபாக்கள் பின்வருமாறு:

"அற்சனை பாட்டே யாகும்
ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்” - சேக்கிழார்

"செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலைதெ ரிந்தவவரோ
டந்தமில்கு ணத்தவர்க ளர்ச்சனைகள் செய்யவமர் கின்றவரனூர்
கொந்தலர்பொ ழிற்பழன வேலிகுளிர் தண்புனல்வ ளம்பெருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி ரும்புபதி வீழிநகரே" -சம்பந்தர்

மேற்கண்ட பாடலில், திருவீழிமிழலைக்குச் சென்ற சம்பந்தர், அங்கு திருக்கோயிலில் செந்தமிழர்கள் தமிழில் அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார். மேலும் "ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லைதன்னுள் ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து", என்ற பாடலில், தில்லைக்கோயிலில் தமிழ்த் துதிகளே ஒலித்ததாகப் பாடுகிறார்.

எனவே தமிழரின் வரலாற்றில் திருக்கோவில்கள் அனைத்திலும் தமிழில்தான் வழிபாடு நடைபெற்றது என்பது தெளிவாகிறது. தமிழர்தம் இறை வழிபாடு என்பது நன்றி நவிலும் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இன்று தமிழர்களின் இறைவழிபாட்டில் தமிழ்மொழி மறைந்து மந்திரங்கள் உச்சாடனை செய்வதும், தீபாராதனை காட்டுதலும் மணியடித்தலும் என்றாகிவிட்டது. இறைவனுக்கும் பக்தனுக்கும் இடைவெளி அதிகரித்து தரகர் ஆதிக்கம் உயர்ந்து வெறும் சம்பிரதாயமும் சாங்கியங்களும் மலிந்துவிட்டன. இந்நிலை மாற வேண்டும். அதற்கு தவத்திரு மறைமலையடிகளார் தலைமையில் தமிழ்ச்சமய மறுமலர்ச்சி ஏற்பட்டு பாவாணர் வழியில் வளர்ந்து வந்த சிந்தனை (இர. திருச்செல்வம், 2021, ப193) மீட்சி பெறுதல் அவசியம். இடையில் பூசப்பட்ட சாயம் களைந்து தமிழரின் பொற்காலத்தை மீண்டும் கொணர தமிழ்ச்சமயம் மறுமலர்ச்சி காணுதல் வேண்டும்.

### 5.3 தமிழ்ச்சமயத்தின் இறையியல் தத்துவம்

தமிழ்ச்சமயத்தின் தத்துவம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய பாரம்பரிய வாழ்வியல் முறை மற்றும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதுதான். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", என்று கூறியபடி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து பல்வேறு தமிழ்ச்சமய நெறிகள் இருந்தாலும் அவற்றைப் பொறைகொண்டு அறஞ்சார்ந்து ஒருங்கிணைப்பதே தமிழினத்தின் நலன் காக்கும் செயல் என தத்துவத்தை கொண்டிருக்கிறது தமிழ்ச்சமயம் (malaysiaindru, 2018)

### 5.4 தமிழ்ச்சமயத்தின் சிந்தனைகள்

தமிழ்ச்சமயம் நிலைபெற நாம் சிந்தனை தெளிய, வேண்டும். தமிழ்ச்சமயத்தின் சிந்தனைகளில் முதன்மையானது தமிழ்மொழி பயன்பாடு. தமிழர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா பண்பாடு, சமயம், வாழ்வியல் நிகழ்வுகளை தமிழிலேயே நிகழ்த்த வேண்டும். அறம், அன்பு, பண்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அயலாரின் சமய குறுக்கீடு இல்லாமல் செய்வித்தல் வேண்டும். இரண்டாவது சிந்தனை கோவில்கள், இடுகாடுகள் தொடர்பில்லாத பெயர் மாற்றம் கண்டு தமிழர் அடையாளம் அழிக்கப்படுவதிலிருந்து தடுக்கப்படவேண்டும். இதற்காக 2018-இல் மலேசியாவில் தோற்றம் கண்ட தமிழ்ச்சமய பேரவை, பேராக் வாழ்வியல் இயக்கத்தின் துணையுடன், ஆய்வுக் கருத்தரங்கு, மாநாடு போன்றவற்றை நிகழ்த்தி வருகிறது. மூன்றாவது சிந்தனை தமிழ்மொழி பேணப்பட வேண்டும், தமிழ்மொழி நன்கு பேணப்படுவதற்கு அதனைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். நான்காவது சிந்தனை தமிழரது பொருளாதார நிலை சிறக்க ஆவன செய்ய வேண்டும். மேலும் தமிழரில் செல்வந்தர்களாக இருப்பவர்கள் சொல்லாற்றலும் செயலாற்றலும் உடைய தமிழர்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருத்தல் வேண்டும்.

### 5.5 தமிழ்ச்சமயத்தின் கட்டமைப்பு கூறுகள்

தமிழர்கள் இறையை மரபு சார்ந்து, சமயம் சார்ந்து மற்றும் அகம் சார்ந்து வழிபாடு செய்தவர்கள். இப்பாதையில் இன்றைய தமிழர்கள் தொடர்ந்து செல்லவும் மீண்டும் அறவழிக்குத்திரும்பவும் தமிழ்ச்சமயம் மூன்று கூறுகளை வரையறுத்துள்ளது (ம. தமிழ்ச்செல்வன், பாரிட் புந்தார் தமிழ் வாழ்வியல் இயக்கம், ௨௦௨௨). அவையாவன:

i. தமிழர்கள் வழிபாடுகள் யாவும் தமிழையே மூலமாக கொண்டிருத்தல்;
ii. தமிழர் மரபுக்கும் பண்பாட்டிற்கும் உள்ளடங்கிய நெறிமுறைகளை கடைபிடித்தல்;
iii. தமிழர் மெய்யிலையும் நூல் மரபுகளையும் மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட வரையறைக்குள் உட்பட்டுள்ள சமயங்களையும் அவற்றை ஒத்த மரபு நெறிகளையும் தமிழ்ச்சமயம் ஏற்கிறது.

### 6.0 முடிவுரை

தமிழ்ச்சமயம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கியது. இஃது அறவகையைச் சார்ந்தது. தமிழ்ச்சமயம் மக்களின் அறிவு நிலைக்கு ஏற்ப தெய்வ வணக்கத்தை வலியுறுத்துகிறது. அவையாவன இயற்கை வழிபாடு, சூரிய வழிபாடு, நடுகல் வழிபாடு, குலதெய்வ வழிபாடு, ஐந்திணை கடவுள்களான மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை வழிபாடு, சிவனியம், மாலியம், ஆசிவகம், சித்தர் நெறி மற்றும் வள்ளலாரின் சன்மார்க்கம் உட்பட தமிழர் சார்ந்த அனைத்தையும் தமிழ்ச்சமயம் ஏற்கிறது. தமிழ்ச்சமயத்தால் தமிழகத்தில் மட்டுமல்ல உலகில் எத்திசையிலும் வாழும் தமிழருக்கும் சரியான தமிழ் வாழ்வியலுக்குத் திரும்பவும் அயலார் மதஅடிமை நிலையிலிருந்து மீட்டெடுக்கவும் தமிழ்ச்சமயம் மறுமலர்ச்சி கண்டுள்ளது. தமிழை இறைமொழியாய்க்கொண்டு தமிழ் மக்கள் சிந்தனை தெளிய, தமிழ்ச்சமயம் காக்க மலேசியாவில் தமிழ்ச்சமயப் பேரவை தொடர்ந்து பணிச்செய்து மக்களிடையே நல்ல ஆதரவையும் பெற்று வருகிறது.

### மேற்கோள்கள்


1. அன்பழகன் கோ. (2009), கடவுள் அறிவியல் உணர்வுக்கொள்கை. இறையருள் மன்றம்.வேலூர் மாவட்டம்.
2. கந்தையா பிள்ளை, ந.சி. (1960). இந்துசமய வரலாறு. புரொகிரசிவ் அச்சகம்
3. குன்றக்குடி அடிகளார், (1955).சமயமறுமலர்ச்சி. ஜீவன் பிரஸ், சென்னை
4. சீனிவாச அய்யங்கார், பி. டி. (1989). தமிழர் வரலாறு: இரண்டாம் பகுதி சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
5. சீதா லட்சுமி, இரா. (2019). தமிழர் சமய வரலாறு: ஒரு பொதுப் பார்வை (The History of Tamil Religion: A General View). Vol. 12
6. ம. தமிழ்ச்செல்வன், பாரிட் புந்தார் தமிழ் வாழ்வியல் இயக்கம், (2022). மலேசிய தமிழ்ப்பேரவை மாநாட்டு உரை
7. திருச்செல்வம், இர. (2021). ஒளிநெறியே தமிழ்ச் சமயம் மடலம் 1: தமிழ் வாழ்வியல் மீட்புநூல் வரிசை 6. தமிழியல் ஆய்வுக் களம், மலேசியா.
8. திருச்செல்வம், இர. (2021). மூலப்பெருந்தமிழ் மரபு தமிழியல் ஆய்வுக் களம். மலேசியா.
9. தேவநேயப் பாவாணர், ஞா. (2000). தமிழர் மதம்.தமிழ்மண் பதிப்பகம். மறுபதிப்பு, தமிழ்நாடு.

10. மறைமலை அடிகள், *(1941)* தமிழர் மதம். பொதுநிலக்க்கழகநிலையம், பல்லவரம்
11. நடராசன், தி. சு. *(2006)*. திறனாய்வுக் கலை: கொள்கைகளும் அணுகுமுறைகளும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் *(பி)* லிட்.
12. ராணி, பொ. *2018* சான்லாஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ். மலர் *3*. இதழ் *2* தொகுதி *1*. கோயமுத்தூர்
13. பா.பிரபு, *(2014). http://nakkeran.com/index.php/2021/09/29/what-religion-is-tamils/*
14. *https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu*
15. *Journal Of Tamil Peraivu Inner August 2018 New 3 (1).Pdf https://ejournal.um.edu.my/index.php/JIS/article/view/24897/11824*
16. மலேசிய நாம் தமிழர் இயக்க ஏற்பாட்டில் தமிழ்ச் சமய மீட்பு அறிஞர்கள் காவலர்கள் கட்டமைப்பு கூட்டம் *(ஆகஸ்ட் 17, 2018):https://malaysiaindru.my/166253*
17. *Narr, Karl J. "Prehistoric Religion." Britcannica. N.p., n.d. Web. 15 Apr. 2015.*




# தமிழே இறைமொழி



# சமய நம்பிக்கையும் சட்ட வரைவுகளும் வரலாற்றுப் பார்வை

**வழக்கறிஞர் சிகரம் ச. செந்தில்நாதன்**

பழங்காலத்தில் தோன்றிய இயற்றப்படாத சட்டங்கள் எல்லாம் மதங்களோடு பிணைந்தவைதான். மனிதனின் அக வாழ்வையும், புற வாழ்வையும் மதம் சார்ந்த நூல்களே நெறிப்படுத்தின, கட்டுப்படுத்தின. அன்று அரசன் வைத்தது தான் சட்டம், என்றாலும் அரசனை இயக்கியது மதம்தான். மதத்தின் பின்னால் இருந்தவர்கள் மதகுருமார்கள். அதனால் அரசனின் சட்டம் மதத்தின் சாயம் இல்லாமல் இயங்க முடியவில்லை. மிகப்பழமையான மதமும் அதன் சட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல. பிறகாலத்தில் மதம் சார்ந்த நூல்கள் எல்லாம் தொகுக்கப்பட்டன. அவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்கள் இனமுறைச் சட்டங்கள் ( PERSONAL LAW ) என்று அழைக்கப்பட்டன.

இந்தி மதத்தின் மூலம் என்று பேசப்படும் வேதங்களிலோ, அதன் அடிப்படையில் எழுந்த ஸ்ருதி, ஸ்மிருதிகள், உபநிடதங்கள் மற்றும் தர்ம சாஸ்திரங்களிலோ இந்து என்ற சொல் இடம் பெறவில்லை. ஹிந்துஸ்தானில் வாழ்ந்த மக்களை 'ஹிந்துக்கள்' என்று பெயரிட்டார்கள்.

எந்தச் சட்டமும் மன்னர்களால் தோற்றுவிக்கப்படவில்லை. வடமொழியில் வேதங்கள் தோன்றின, அதை ஒட்டி தர்ம சாத்திரங்கள் தோன்றின. அவைகளில் வாழ்க்கை, சமூகம், அரசு, சமயம் பற்றிப் பேசப்பட்டன. அவைகளே தனியாக இயற்றப்படாத சட்டங்களாக இருந்தன. அப்போதும் அவை சட்டம் என்று அழைக்கப்படவில்லை. தர்ம சாத்திரங்கள் என்றே சொல்லப்பட்டன. அரசன் தன் போக்கில் அவைகளை எல்லாம் மக்களிடம் நடைமுறைப்படுத்தினான். தர்ம சாத்திரங்கள் வடமொழிச் சார்பும், ஆரிய சார்பும் உடையவையாக இருந்தன. தர்ம சாத்திரங்களை மன்னர்கள் ஏற்க வைத்தார்கள். மன்னன் வழி மக்களும் ஏற்றார்கள். பிறகாலத்தில் இவைகளே சட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது.

குறிப்பாகச் சட்டத்தின் மூலம் எது என்று பார்த்தால், அவை ஸ்ருதி (SRUTI) ஸ்மிரிதிகள் (SMRITIS) வழக்கம் (CUSTOM) என்று தெரிய வரும். ஸ்ருதி என்றால் என்ன? முனிவர்களுக்கும் அடியார்களுக்கும் கடவுள் கூறிய தெய்வ மொழிகள் "ஸ்ருதி" என்று சொல்லப்படுகிறது. கடவுளிடமிருந்து நேரடியாக வந்தவை என்பதால் சாத்திரங்களில் இதற்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். வேதங்களும், உபநிடதங்களும் இதில் அடங்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் சட்டம் சம்பந்தமானவை இவற்றில் குறைவு.

"ஸ்மிருதிகள்" என்றால் என்ன? "ஸ்மிருதிகள்" என்பது கடவுள் சொன்னதை முனிவர்கள் தங்கள் நினைவில் வைத்திருந்து சொன்னதாகவும். ஸ்ருதியில் கடவுள் சொன்ன சொற்கள் அப்படியே இடம்பெறுவதாகவும், ஸ்ருதிகளில் கடவுள் சொன்னதைக் கேட்ட முனிவர்கள் தங்கள் நினைவிலிருந்து தங்கள் சொற்களில் சொல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. என்றாலும் இவற்றிலும் சமயச் செய்திகள் காணப்படும் அளவுக்குச் சட்டச் செய்திகள் கிடையாது.

ஸ்ருதிகளில் சூத்திரங்கள், தர்ம சாத்திரங்கள் என்று இரண்டுவகை உண்டு. இவை இரண்டு பற்றியும் பல முனிவர்கள் விளக்கங்கள் எழுதியிருக்கிறார்கள். அந்த விளக்கங்கள் ஒன்றுடன் ஒன்று வேறுபடுகின்றன. இந்த வேறுபாடுகளையும் உள்ளடக்கியதுதான் சட்டம். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விளக்கம் அல்லது உரை பின்பற்றப்படுவதால் நாட்டின் ஒரு பகுதியில் பின்பற்றப்படுவது இன்னொரு பகுதியில் பின்பற்றப்படுவதில்லை. காலப்போக்கில் தர்ம சாத்திரங்களும், சூத்திரங்களும் மறைந்து போயின. ஆங்காங்கே உள்ள பழக்க வழக்கங்களே எஞ்சி நிற்கின்றன.

மதத்தில் வழக்கத்திற்கு (C U S T O M) ஒரு முக்கியத்துவம் உண்டு. பிற்காலத்தில் ஏற்றப்பட்ட சட்டங்களும் வழக்கங்களை அங்கீகரித்தன. வழக்கம் என்பது ஒரு குடும்பத்தில், ஒரு சாதியில், ஒரு ஊரில் தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வரும் விதிகளாகும். ஸ்மிருதிகளிடமிருந்து வழக்கம் முரண்பட்டால், வழக்கத்தையே நீதிமன்றம் ஏற்கும். ஆனால் எந்த வழக்கமும் ஒழுக்கத்திற்கும், பொது நலனுக்கும் எதிரானதாக இருந்தால் அது செல்லுபடி ஆகாது.

வழக்கம் வழக்காறு (CUSTOM AND USAGE)

வழக்கம் வேறு, வழக்காறு வேறு, இரண்டும் கிட்டத்தட்ட ஒரே பொருளில் பேசப்பட்டு வந்தாலும் இரண்டிற்கும் சற்று வேறுபாடு உண்டு என்பதை சட்டங்கள் தெளிவாககி இருக்கின்றன. வழக்காறு எங்கே முடிகின்றதோ அங்கே வழக்கம் ஆரம்பமாவதாகக் கொள்ளலாம். ஒரே மாதிரியாக இருத்தல், நெடுங்காலமாக இருத்தல் முதலிய அம்சங்கள் வழக்கத்திற்கு அவசியம். வழக்காற்றிற்கு இவை தேவையில்லை. வழக்காறு வளர்ந்து கொண்டிருக்கலாம். வழக்காடுவோர் அவற்றை ஒத்துக் கொண்டிருக்கலாம், புரிந்துகொண்டும் இருக்கலாம். அவைகளே போதுமானவையாகும்.

இன்று சட்டம் என்பது சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்கள் அடிப்படையிலும், நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் இயங்குகிறது.
இயற்றப்பட்ட சட்டங்கள் தர்ம சாத்திரங்களிலிருந்து விலகிச் செல்கின்றன. எடுத்துக்காட்டாக தர்ம சாத்திரங்கள் விதவை மறுமணம் செய்வதை ஆதரிக்கவில்லை. ஆனால் இயற்றப்பட்ட சட்டம் விதவை மறுமணத்தை மறுதலிக்கவில்லை. தர்ம சாத்திரங்களில் ஒருவர் உரிமை வயது அடைதல் MAJORITY என்ற நிலை இல்லை. ஆனால் சட்டம் ஒருவர் 18 வயதைப் பூர்த்தி செய்து விட்டால் உரிமை வயது அடைந்துவிட்டதாகச் சட்டத்தால் கருதப்படுவார். சாதி, பாலினப் பாகுபாடுகள் தர்ம சாத்திரங்களில் உண்டு. ஆனால் சட்டத்தில் அது இல்லை. திருமணம் சொத்து சம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டங்கள் தர்ம சாத்திரங்களில் இருந்து மாறுபட்டுள்ளன.

சட்டம் யார்க்கு என்று அறிய வேண்டியிருக்கிறது. இந்தியாவில் ஒரே மொழி பேசுவதில்லை. ஒரே கடவுளை வணங்குவதுமில்லை. மாநிலத்திற்கு மாநிலம் பண்டிகைகளும், திருவிழாக்களும் மாறுபடுகின்றன. உணவுப் பழக்க வழக்கமும் அப்படியே. மதத்திற்குள்ளும் பல பிரிவுகள் இருக்கின்றன. சைவமும், வைணவம் மதத்தில் பெரிய இரண்டு பிரிவுகள்.

இவற்றுள்ளும் உட்பிரிவுகள் உண்டு. பெருந்தெய்வ வழிபாடு அல்லாமல் பெண் தெய்வ வழிபாடும், சிறு தெய்வ வழிபாடும் உண்டு.

வேதங்களும் தர்ம சாத்திரங்களும் எல்லாராலும் ஏற்கப்படுவதில்லை. குறிப்பாக தென்னிந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் மாறுபட்ட பண்பாடு இருக்கின்றது. எனவே தர்ம சாத்திரங்கள் இந்தியாவில் பரந்த பகுதியில் வாழும் எல்லா மக்களையும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆங்காங்கே நிலவும் பழக்க வழக்கங்களை வைத்தே திருமணம் போன்ற பிரச்சனைகளில் நீதிமன்றங்கள் முடிவுகளை எடுத்தன. இதனால் பிரிட்டிஷ் ஆட்சியிலும் சுதந்திர இந்தியாவிலும் திருமணம், சொத்துரிமை மற்றும் சில உரிமைகள் சார்பாக இந்து மதத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வாறே சட்டங்கள் இயற்றப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் இயற்றப்பட்ட சட்டங்களில் முக்கியமானவை கீழ்வருபவை.

1. *The Caste Disabilities Removal Act of 1850*
2. *The Hindu Widows Re-Marriage Act, 1856*
3. *The Native Converts Marriage Dissolution Act, 1856*
4. *The Indian Majority Act, 1875*
5. *The Transfer of Property Act, 1882*
6. *The Guardian and Wards Act, 1890*
7. *The Special Marriage Act, 1872*
8. *The Indian Succession Act, 1925*
9. *The Hindu Inheritance (Removal of Disabilities Act, 1928)*
10. *The Hindu Law of Inheritance (Amendments Act, 1929)*
11. *The Hindu Gains of Learning Act, 1930*
12. *The Hindu Women's Rights to Property Act, 1937*
13. *The Hindu Marriage Validation Act, 1937*
14. *The Hindu Marriage Women's Right to Separate Residence and Maintenance Act, 1946*
15. *The Hindu Marriage Disabilities Removal Act of 1947*
16. *Hindu Marriage Validity Act, 1949*
17. *Madras Hindu Wills Resolution Act, 1829*

திருமணச் சட்டம் 1955 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதனால் விளைந்த மாறுதல்கள் என்ன என்பதைப் பார்க்கும் முன்னர் இச்சட்டம் வருவதற்கு முன்பு திருமணம் என்பது சமூகத்தில் எவ்வாறு இருந்தது என்பதைப் பார்ப்போம்.
திருமணம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகப் பார்க்கப்படவில்லை. மாறாக ஒரு புனிதமான வாழ்வியல் சமயச்சடங்காகப் பார்க்கப்பட்டது.

பழைய சமூகத்தில் எட்டுவகை திருமணங்கள் வழக்கில் இருந்தன. அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டன. காலப்போக்கில் எட்டுவகைத் திருமணங்களில் இரண்டு வகைத் திருமண முறைகளே நிலைத்தன என்பார்கள். ஒன்று பிரம்ம வகைத் திருமணம். மற்றொன்று அஸ்வர வகைத் திருமணம். இரண்டுக்கும் என்ன வேறுபாடு என்றால், பிரம்ம வகை திருமணத்தில் பெண் மணமகனுக்குப் பரிசாகத் தரப்படுகிறாள். ஆனால் அஸ்வர வகைத் திருமணத்தில் மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணுக்குப் பொருள் தருவார்கள்.

சாத்திர நூல்கள் சில சடங்குகள் பற்றியும் பேசுகின்றன. முக்கியமான சடங்குகள் மூன்று. ஒன்று நிச்சயதார்த்தம், இரண்டாவது ஹோமம் வளர்த்து மந்திரம் சொல்லுதல், மூன்றாவது ஹோமத்தை வலம் வருதல். வலம் வருதலுடன் சடங்கு முற்றுப் பெறும். இதில் கவனிக்க வேண்டியது முக்கியமாக, திருமணம் முடிந்ததற்கு சாந்தி முகூர்த்தமோ அல்லது முதலிரவோ அடையாளம் அல்ல. ஒவ்வொரு சாதியிலும், ஒவ்வொரு பகுதியிலும் திருமணத்தின் போது பலவகைச் சடங்குகள் பின்பற்றப்படலாம். அவை எல்லாம் அடிப்படை அல்ல.

தர்மசாத்திரங்களில் திருமணம் செய்து கொள்வதற்கு குறைந்த அளவு வயது என்று எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அதனால் குழந்தைத் திருமணங்கள் நடந்தன. இதனால் பல தீமைகள் விளைந்தன. இத்தீமைகளைக் களைய பிரிட்டிஷ் ஆட்சியில் 1929 ஆம் ஆண்டு குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் (CHILD MARRIAGE RESTRAINT ACT) கொண்டுவரப்பட்டது. 18 வயது முழுமை அடையாத ஆணும், 14 வயது முழுமை அடையாத பெண்ணும் திருமணம் செய்து கொள்வது தடுக்கப்பட்டது. கலப்புத் திருமணத்தை தர்ம சாத்திரங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியில் சிறப்புத் திருமண சட்டம் (Special marriage Act ) 1872 ஆம் ஆண்டிலும், பின்னர் 1923 ஆம் ஆண்டிலும் கொண்டு வரப்பட்டன. அவைகள் ரத்து செய்யப்பட்டு சுதந்திர இந்தியாவில் 1954 ஆம் ஆண்டு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் சாதி, மதம், சமய, சடங்குகள் கடந்த திருமணங்கள் பதிவு செய்துகொள்ளப்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டது.
தர்ம சாத்திரங்கள் வர்ணாசிரம கோட்பாட்டை பேசுவன. நான்கு வர்ணத்தில் சூத்திரர்களுக்கு கோத்திரம் கிடையாது. மற்ற வர்ணத்தாருக்கு உண்டு.

தங்கள் குடும்பத்தை நிறுவியவர் என்று ஒரு முனிவரை முதன்மையாகக் கொண்டு கோத்திரங்கள் தோன்றின. ஒரே கோத்திரத்தில் உள்ளவர்கள் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். இதைத் தவிர்க்கும் பொருட்டு THE HINDU MARRIAGE DISABLITIES REMOVAL ACT (1946ஆம் ஆண்டு திருமண தகவின்மை நீக்கச்சட்டம்) கொண்டுவரப்பட்டது. விதவைகள் மீண்டும் திருமணம் செய்து கொள்வதை அங்கீகரிக்கும் வண்ணம் HINDU WIDOW'S REMARRIAGE ACT 1856 கொண்டுவரப்பட்டது.

மேலே கண்டவை வெள்ளைக்காரர்கள் ஆட்சியிலேயே தர்ம சாத்திரங்கள் ஏற்காத பல அம்சங்கள் சட்டப்படி அங்கீகரிக்கப் பட்டதை எடுத்துக்காட்டும்.

திருமணச்சட்டம் 1955

1955 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி திருமண சட்டம் இந்தியா முழுவதும் அமலுக்கு வந்தது. திருமணத்திலிருந்த மதத்தின் பிடிப்பு இச்சட்டத்தால் வெகுவாக தளர்த்தப்பட்டது. தர்ம சாத்திரங்களில் இருந்த பல அம்சங்கள் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அது மட்டுமல்ல பல புதிய நிவாரணங்களை இச்சட்டம் மக்களுக்குக் கொடுத்தது. திருமணத்தை முறித்துக் கொள்வதற்கும், செல்லாது என்று களைத்துக் கொள்வதற்கும் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. மனம் முறிவு இல்லாமலே கணவனும் மனைவியும் நீதிமுறைப் பிரிவு JUDICIAL SEPERATION என்னும் ஏற்பாட்டைச் செய்து கொள்ள வகைச் செய்யப்பட்டது. கணவனோ, மனைவியோ கைவிட்டால் தாம்பத்திய உறவு கோரும் உரிமை சட்டத்தில் அனுமதிக்க பட்டது. பலதார மண உரிமை மறுக்கப்பட்டது. இந்துக்கள் தம்முள் திருமணம் செய்து கொள்ள சாதியோ, கோத்திரமோ தடையில்லை என்ற நிலை உருவாக்கப்பட்டது.

இவ்வாறு திருமண முறை புதிய உருவத்தையும் உள்ளடக்கத்தையும் பெற்றது. பிற்காலத்தில் மேலும் பல சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டது.

திருமணச் சட்டத்தில் திட்டவட்டமாக வரையறை செய்து கூறப்படவில்லை. எதிர்மறையான விளக்கமே தரப்பட்டுள்ளது. யார் ஒருவர் இஸ்லாமியராக, கிறிஸ்தவராக, பார்சியாக, யூதராக இல்லையோ, அவர் இந்தியாவை நிலையான இருப்பிடமாகக் கொண்டிருந்தால் அவர் இந்துவாக கருதப்படுவார்.

வேதங்களை ஏற்க மறுப்பவரும், கடவுள் நம்பிக்கை அற்றவரும் கூட இந்தியாவை நிலையான இருப்பிடமாக கொண்டிருந்தால் அவரும் இந்துதான். அவருக்கும் இந்துச் சட்டம் தான் பொருந்தும். இந்த விளக்கப்படி புத்த, சமண, சீக்கிய மத பிரிவினரும் இந்துச் சட்டத்திற்கே உட்படுவார்கள். அவர்கள் தங்களை இந்துக்கள் அல்ல என்று சொல்லிக் கொண்டாலும்! இந்துத் திருமணச் சட்டம் சடங்குகள் இல்லாத திருமணத்தை அங்கீகரிக்கவில்லை. அதேசமயம் பெண் வீட்டாரோ அல்லது மாப்பிள்ளை வீட்டாரோ தம்முள் ஒத்துக் கொண்டு எந்தச் சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் மேற்கொள்ளலாம். அவை சட்டவிரோதமாக இருக்கக் கூடாது என்பதுதான் முக்கியம். சட்டம் வற்புறுத்துகிற சடங்கு என்பது திருமணத்தில் சப்தபதி SAPTAPATI என்கிற நிகழ்ச்சி இடம்பெற வேண்டும் என்பதுதான். அதாவது ஹோமத்தை மணமக்கள் ஏழு அடி எடுத்து வைத்து வலம் வர வேண்டும். தாலி கட்டுவதைச் சட்டம் வலியுறுத்தவில்லை.

தற்போது திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயம் என்று தமிழ்நாட்டில் ஆக்கப்பட்டுள்ளது. முன்பு அது சம்பந்தப்பட்டவர்களின் விருப்பமாக இருந்தது. திருமணப் பதிவு கட்டாயம் என்று ஆனதால், சடங்குகள் முக்கியத்துவத்தை இழந்து விட்டன. இதற்கும் முன்பே எந்தவித மதச் சடங்குகளும் இல்லாமல் எந்த சாதியையும், மதத்தையும் சேர்ந்த எவரும் பதிவாளர் முன்னிலையில் திருமணம் செய்து கொள்ள வழி செய்யும் சிறப்பு திருமண சட்டம் வெள்ளையர் காலத்திலேயே இயற்றப்பட்டு, திருத்தப்பட்டு இப்போது 1954 ஆம் ஆண்டின் சட்டமாக சிறப்புத் திருமணச் சட்டம் SPECIAL MARRIAGE ACT நடைமுறையில் இருக்கிறது. இது தர்ம சாத்திரங்களுக்கு சவால் விடும் சட்டமாகும்.

தமிழ்நாட்டில் சுயமரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்த திருமணம் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்துத் திருமண சட்டத்தில் தான் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

சுயமரியாதை திருமணம் அல்லது சீர்திருத்த திருமணம் தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தினர் ஒரு புதுவகை திருமணத்தை அறிமுகப்படுத்தினர். நண்பர்கள், உறவினர்கள் குழுமியிருக்க நடக்கும் திருமணத்தில் புரோகிதர் இருக்க மாட்டார். "சப்தபதி" என்னும் சடங்கு நடைபெறாது. இத்தகைய திருமணங்கள் நாட்டில் பல்கிப் பெருகவே சட்டம் அவற்றை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. திருமணச் சட்டம் 1955க்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதற்கு இந்துத் திருமணங்கள் (சென்னை திருத்தம்) சட்டம் 1967 THE HINDU MARRIAGE (MADRAS AMENDEMENT) ACT 1967 என்பது பெயர்.

இந்துத் திருமணச் சட்டம் 1955, 7-ஆவது பிரிவிற்குப் பின்னர் 7ஏ என்ற புதிய பிரிவை இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வருகிறது. இது தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரியது. சுயமரியாதை அல்லது சீர்திருத்த திருமணத்தில் புரோகிதர் மந்திரம் ஓதுதல், மணமக்களை ஹோமத்தை ஏழு அடி எடுத்து வைத்து வலம் வருதல் ஆகியவை நடைபெற வேண்டிய அவசியம் இல்லை. உறவினர்கள், நண்பர்கள், மற்றவர்கள் முன்னிலையில் அத்திருமணம் நடைபெறும். மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து, மற்றவர்களுக்குப் புரியும் மொழியில் கணவனாக அல்லது மனைவியாக மற்றவரை ஏற்றுக் கொள்வதாகச் சொல்ல வேண்டும், அல்லது மணமக்கள் மாலை அல்லது மோதிரம் மாற்றிக் கொள்ள வேண்டும், அல்லது தாலி கட்ட வேண்டும். சுயமரியாதை அல்லது சீர்திருத்தத் தீர்மானச் சட்டம் அங்கீகாரம் பெற்றுவிட்டதால் திருமணம் பற்றிய கண்ணோட்டமும், நிகழ்வு முறைகளும் மாறிவிட்டன.

இந்து மதம் என்ற சொல் வடமொழி வேதங்களிலோ, இலக்கியங்களிலோ கிடையாது. அதுபோல் தமிழ் நூல்களிலும் அச்சொல் இடம் பெறவில்லை. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தங்களை "இந்து" என்ற சொல்லால் அறிமுகம் ஆகவில்லை. இச்சொல்லை வழத்திற்கு கொண்டுவந்தவர்கள் ஆங்கிலேயர்கள் தான். அவர்கள் ஆட்சி ஏற்பட்டபோது நீதிபரிபாலன முறையும் உருவாக்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் அவர்களின் மதங்கள் அடிப்படையில் திருமணம் முதலிய வாழ்வியல் நடைமுறைகளில் நீதி வழங்க முடிந்தது. கிறித்துவர், இஸ்லாமியர் அல்லாத பிற இந்திய மக்களுக்கு நீதி வழங்க சட்டம் நூல் எதுவும் கிடையாது. அப்போது சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பிராமணர்கள் மனு சாத்திரங்களை வெள்ளையர்களுக்குக் கொடுத்து இதுதான் மக்களின் இன முறைச்சட்டம் PERSONAL LAW என்றார்கள். வெள்ளைக்காரர்களும் அதை ஏற்றுக் கொண்டு அதற்கு இந்துச் சட்டம் HINDU LAW என்று பெயர் கொடுத்தார்கள்.

சுதந்திரத்திற்கு முன்பு எழுதப்பட்ட விற்பனை ஆவணங்கள், அடைமானப் பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்களைப் பார்த்தால் அவைகளில் சிவ மதம், விஷ்ணு மதம் என்ற சொற்களே அதிகம் இருக்கும். இந்து மதம் என்ற சொல்லே சில ஆங்கில ஆவணங்களில் தான் பொதுவாக இடம் பிடித்தன.

தமிழ்நாட்டு திருமண பண்பாட்டு வரலாற்றில் காதல் மணம் என்னும் களவு மணம் மற்றும் கற்பு மணம் ஆகிய இரண்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இது குறித்த குறுந்தொகை பாடல் அனைவரும் அறிந்ததே.

"யாயும் ஞாயும் யாரா கியாரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்றாலும் காலப்போக்கில் புரோகிதர்கள் சமஸ்கிருத வேத மந்திரங்கள் ஓதி நடத்தும் வைதீக திருமண முறையே தமிழ்நாட்டில் பரவலாக இருந்தது. இந்த வைதீக முறைக்கு மாற்று காணும் முயற்சி 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம் சுயமரியாதைத் திருமணத்தை முன்னெடுத்தது. பின்னர் அது சட்டமும் ஆனது. தனித்தமிழ் இயக்கம் கண்ட மறைமலை அடிகளார், தமிழ்ச் சைவத்தை பிராமணிய மயமாக்கப்பட்ட சைவத்திடமிருந்து மீட்டு தமிழ் மொழியோடும், தமிழர் பண்பாட்டோடும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். வேத மந்திரங்களுக்குப் பதில் சைவத்திருமுறைகளை ஓதி திருமணம் நடத்தும் முறை அவரால் வலிமை பெற்றது.

சுயமரியாதைத் திருமணத்தை அங்கீகரிக்க சட்டத் திருத்தம் தேவைப்பட்டதுபோல், திருமுறை திருமணத்திற்குச் சட்டத் திருத்தம் தேவையில்லை. இவ்வகைத் திருமணத்தில் பிராமணர்களுக்கு பதில் பிராமணர் அல்லாதவர் திருமணச் சடங்குகளை செய்து வைக்கிறார். வடமொழி வேதத்திற்குப் பதில் திருமுறைகள் ஓதப்படுகின்றன. இது திருமண சட்டத்திற்கு எந்த வகையிலும் முரண்பட்டு இல்லை. ஏனென்றால் திருமணச்சட்டத்தில் இந்த மொழியில்,

சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும், இந்த சாதியினர் சடங்குகளைச் செய்ய வேண்டும் என்றும், இந்த மந்திரங்கள்தான் பயன்படுத்த வேண்டும் என்றும் சொல்லப்படவில்லை. அதனால் திருமுறைத் திருமணத்திற்கு சட்டம் குறுக்கே வரவில்லை. தீயை வளர்த்து (ஹோமம்) ஏழு அடி வலமாக வந்தால் போதுமானது. இதை மட்டும்தான் திருமணத்தின் பிரதான சடங்காகத் திருமணச் சட்டம் சுட்டிக்காட்டுகின்றது. மற்ற சடங்குகள் திருமண வீட்டார்களின் விருப்பத்திற்கு உரியது. திருமணத்தைப் பதிவு செய்வது கட்டாயம் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின் சடங்குகள் அவற்றின் அவசியத்தையும் புனிதத்தையும் ஓசை இல்லாமல் இழந்து விட்டன.

வடமொழி தான் மந்திர மொழி என்றும் தமிழ் மந்திர மொழி அல்ல என்று கற்பிக்கப்பட்ட வாதங்கள் எல்லாம் இன்று மக்களாலும், நீதிமன்றங்களாலும் நிராகரிக்கப்பட்டு விட்டன. மந்திரம் என்ற சொல் தொல்காப்பியத்திலையே விளக்கப்பட்டு விட்டது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறை மொழிதானே மந்திரம் என்ப"

என்கிறது தொல்காப்பியம். ஒரு சொல்லின் பொருளையும் அதன் ஆற்றலையும் முழுமையாகப் புரிந்து கொண்டு சொல்லும் போது அச்சொல் மந்திரமாகிறது என்பதுதான் தொல்காப்பியம் அளிக்கும் விளக்கம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் தமிழில் தேவாரம்பாடி அந்தத் தேவாரம் மந்திராமொழி என்பதை நிரூபித்துக் காட்டி விட்டார்கள், என்பதை அவர்கள் ஆற்றிய அற்புத செயல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

திருஞானசம்பந்தரே தான் கூறுபவை மந்திரம் என்கிறார்.
"மருந்து வேண்டில் இவை மந்திரங்கள்- இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள்..."

(மூன்றாம் திருமுறை பதிகம் 253 பாடல் 263)

திருமுறை கண்ட புராணத்தில் உமாபதி சிவம் பாடல் 13 இல் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"கண்ட பெருமந்திரமே மூவர் பாடல்
கை காணா மந்திரம் கண்ணுதலோன் கூறல்"

தமிழ் மந்திர மொழி மட்டுமல்ல. தனி வேதமும் சித்தாந்தமும் உடைய மொழி.
டாக்டர் விஸ்வலிங்கம் "தமிழர்களின் சமயம்" THE RELIGION OF TAMILS என்று ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதி உள்ளார். சைவ சித்தாந்தம் தமிழ் மக்களின் பூர்வீக சமயம் என்றும், அது தமிழ் இலக்கியத்திலிருந்து உருவானது என்றும் விளக்கியுள்ளார். டாக்டர் ஜி.யு.போப், பேராசிரியர் சேஷாகிரி சாஸ்திரியார் ஆகியோரின் ஆய்வுகளைச் சுட்டிக்காட்டி எழுதியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு தான் தமிழர்களின் நான்மறை என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். அதில் ஒரு பகுதியை பார்ப்போம்.

*"They then set themselves the task of translating learned treaties from Tamil to Sanskrit in secret to give the impression to the mass of the people, that these translations were original productions in Sanskrit, and were later translated into Tamil – a not uncommon trick practiced by nations even to this day. The initial success they attained at the hands of their royal masters would appear to have emboldened them social eminence. In place of the Pandaya – Nan – marai, the ancient treaties on Aram, Porul and Inbam and the Agamas of the Tamil land, the vedas, Upanishads and allied literature were introduced. In the temples were installed a multiplicity of gods and goddesses, thereby causing confusion in the minds of the followers of the rational monotheistic religion of the Tamils".*

தமிழர்களுக்குப் பண்டை நான்மறை உண்டு. அது அறம், பொருள், இன்பம், வீடு என்பவைதான்.

''சதாசிவத் தத்துவம் முத்தமிழ் வேதம்'' என்று திருமூலர் கூறியுள்ளார். திருஞானசம்பந்தரும் இதை உறுதி செய்திருக்கிறார்.

"அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம், பொருள், இன்பம், வீடு
மொழிந்த வாயான் முக்கண்ணாதி
மேயது முது குன்றே

- பதிகம் 53 பாடல் 579

வடமொழி பேசும் தத்துவம் வேறு, தமிழ் மொழி பேசும் சைவ சித்தாந்தம் வேறு. அதாவது வடமொழி வேதம் சொல்லும் பிரம்மம் வேறு, தத்துவமாசி வேறு, சைவ சித்தாந்தம் பேசும் பதி, பசு, பாசம் வேறு.

தமிழர்களுக்குத் தனி வேதமும் சித்தாந்தமும் உண்டு. இல்லை என்றால் 14 சாத்திர நூல்கள் தமிழில் ஏன் தோன்ற வேண்டும்?



# தமிழே இறைமொழி

# தமிழ்ச்சமய ஆதரவு இயக்கங்கள்

1.உலகத் தமிழர் பாதுகாப்புச் செயலகம்
2.உலகத் தமிழ் சைவப் பெருமக்கள் சங்கம்
3.ஈப்போ வள்ளலார் அன்பு நிலையம்
4.தமிழ்நாடு கோவை பேரூராதீனம்
5.தமிழ்நாடு தமிழ் தேசியப் பேரியக்கம்
6.தமிழ்நாடு தெய்வத் தமிழ்ப் பேரவை
7.மலேசிய சுந்தரர் சிவயோக ஆசிரமம்
8.தமிழ் வாழ்வியல் இயக்கம்
9.மலேசிய தமிழியல் ஆய்வுக் களம்
10.மலேசிய சைவ நற்பணிக் கழகம்
11.மலேசிய தமிழர் தேசியப் பேரவை
12.கோலாலம்பூர் இலக்கியக் கழகம்
13. கம்பார் தமிழர் விழிப்புணர்வு இயக்கம்
14.தமிழ் வளர்ச்சிக் கழகம்
15.தமிழ் நெறி வாழ்வியல் இயக்கம்
16.மலேசிய புதிய தமிழ்த் தலைமுறை இயக்கம்
17.மலேசிய தங்கத் தமிழர்
18.மலேசியத் தமிழர் எழுச்சி இயக்கம்
19.தமிழ் பண்பாட்டு இயக்கம்
20.தமிழர் ஒற்றுமை இயக்கம்
21.மாணவர் வசந்தம்
22.மகாத்மா காந்தி கலாசாலை முன்னாள் மாணவர் சங்கம்.
23.மலேசியத் தமிழர் சங்கம் தெலுக் பங்ளிமா காராங் கிளை
24. அமரர் ஐயா மதிவதனன் சிதம்பரபிள்ளை முதலாம் ஆண்டு நினைவு பதிவு
25.நாம் தமிழர் மலேசியா
26.மலேசிய ஒற்றுமை நம்பிக்கை இயக்கம்
27. தமிழர் கலை இலக்கிய பண்பாட்டுப் பாசறை
28. தமிழ் நாடு, நாம் தமிழர் கட்சி
29. தமிழ் நாடு, வீரத் தமிழர் முன்னணி

## தமிழர் மரபார்ந்த வாழ்வியல் சடங்கு நெறிமுறைகள் நடத்துநர் தொடர்புகள்

***தமிழியல் ஆய்வுக் களம், மலேசியா***

*தமிழ்த்திரு இர. திருச்செல்வனார் : 012 524 6471*

*தமிழ்த்திரு அ. பன்னீர்ச் செல்வனார் : 012 400 5070*

***தமிழ் வாழ்வியல் இயக்கம், பாரிட் புந்தார்***

*தமிழ்த்திரு க. முருகையனார் : 012 428 7965*

*தமிழ்த்திரு ம. தமிழ்ச்செல்வனார் : 013 439 2016*

***மலேசிய சைவ நற்பணிக் கழகம்***

*தமிழ்த்திரு ந. தர்மலிங்கனார் : 012 327 7061*

***வள்ளலார் அன்பு நிலையம், ஈப்போ***

*தமிழ்த்திரு க. கலையரசனார் : 011 5503 1454*

மலேசிய சுந்தரர் சிவயோக ஆசிரமம்

*தமிழ்த்திரு அண்ணாதுரைனார் : 012 358 3363*

*தமிழ்த்திரு சுந்தரம் சிவபூசகனார் : 019 211 0923*

***கம்பார் தமிழர் விழிப்புணர்வு இயக்கம், பேராக்***

*தமிழ்த்திரு ம. தமிழரணார் : 018 773 2521*

***தமிழ்நெறி வாழ்வியல் இயக்கம்***

*தமிழ்த்திரு மா. அருள்முனைவனார் : 017 331 5341*

*தமிழ்த்திரு கு.மு. துறைனார் : 012 679 1574*

*தமிழ்த்திரு சி. மாசிலனார் : 013 332 1375*

***மலேசிய தங்கத் தமிழர் இயக்கம்***

*தமிழ்த்திரு சு. இலக்கியவாணனார் : 016 283 7759*

**உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம்**

*தமிழ்த்திரு வீ. பாலமுருகனார் : 014 309 9379*

***மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை***

*தமிழ்த்திரு மு. ஆனந்த தமிழனார் : 014 932 7025*

# தமிழ்ச்சமயம் தமிழரின் தாய்ச்சமயம்

## இறைமையில் தமிழ்மை!

## தமிழ்மையில் இறைமை!

இறைமையில் தமிழ்மை; தமிழ்மையில் இறைமை
இரண்டறக் கலந்த இயற்கை ஒருமை!

இறைமையில் சார்பவர் தமிழ்மையைக் காண்பார்;
தமிழ்மையில் சார்பவர் இறைமையைக் காண்பார்!

இறைமையும் தமிழ்மையும் இசைந்த மறைமை,
இறைமயம் செய்வதால் இறைமொழி தமிழே!

நிறைமொழி மாந்தர் மெய்கண்டு ஆணையில்
இறைமொழி மறைமொழி தமிழென் றாரே!



மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை வெளியீடு